தமிழன்

தேர்தல் தொடர்பான செய்திகளுக்கு இணைந்திருங்கள்

www.thamilan.lk



Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


நக்கல்நமசிவாயம்





மலர் : 01, இதழ் : 35 சார்வரி வருடம், ஆடி மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை (08.08.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-17, 0115886187 பக்கங்கள் 08 விலை ரூ.20


# 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கிறது



# பொதுஜன பெரமுன!

- ★ மஹிந்த புதிய பிரதமராக நாளை களனி விகாரையில் பதவியேற்பு
- ★ திங்கட்கிழமை கண்டியில் அமைச்சரவை பதவிப்பிரமாணம்
- ★ பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சுகள் பிரதமர் வசம்
- ★ புதிய எம்.பி.க்கள் பெயர் திங்கள் வர்த்தமானியில்
- ★ இளவயது எம்.பி.க்களுக்கு விசேட பொறுப்புகள்
- ★ பிரதமருடன் அமைச்சரவை 26 பேராக வரையறை
- ★ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்று அமைச்சுக்கள்
- ★ மைத்திரி - டக்ளஸ் - அதாவுல்லாஹ் ஆகியோருக்கு முக்கிய அமைச்சுகள்
- ★ கல்வி - சுகாதாரம் - துறைமுகம் - விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கு புதுமுகங்கள் 02




02

## வடக்கு-கிழக்கில் நேர்மையான தேர்தல் நடக்கவில்லை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்!

திருமலையிலிருந்து 'தமிழனுக்கு' விசேட செவ்வி

02

## அதிகப்படியான விருப்பு வாக்குகளால் மஹிந்த குருநாகலில் சாதனை



- ★ முன்னாள் உறுப்பினர்கள் 73 பேர் தோல்வி
- ★ நாடாளுமன்றத்துக்கு 58 புதிய முகங்கள் அறிமுகம்
- ★ ரணில் - மாவை - அர்ஜுன ரணதுங்க உட்பட்ட பிரபலங்கள் தோல்வி

02



## தாமரைமொட்டின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள்...

02

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலுக்கு புடுங்குப்பாடு!

அம்பாறைக்கு வழங்கத் தயாராகிறார் சம்பந்தன் 02

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்...

| கட்சிகளின் பெயர்கள் | மொ. வாக்குகள் | ஆசனம் | விகிதம் | தே.பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 57,42,58 | 017 | 48 8% | 06 | 034 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 16,60,87 | 36 | 12 8 % | 6 | 43 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 2,16,057 | 8 | 1 71% | 0 | 0 |
| தேசிய மக்கள் சக்தி | 3,34,847 | 1 | 2 73% | 0 | 2 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 56,655 | 0 | 47% | 0 | 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 50,353 | 1 | 42% | | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,38,324 | | 1 04% | 0 | 0 |
| எங்கள் மக்கள் சக்தி கட்சி | 56,647 | | 47% | 0 | 0 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 56,581 | 0 | 47% | | 0 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 55,468 | 0 | 46% | | 0 |
| முஸ்லிம் தேசியக் கூட்டணி | 44,870 | 0 | 37% | | 0 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி | 40,2 0 | 0 | 33% | | 0 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 32,208 | 0 | 26% | | 0 |
| தேசிய காங்கிரஸ் | 28,161 | 0 | 23% | | 0 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 23,317 | 0 | 2 % | | 0 |



## புதிய அரசுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாக அமெரிக்கா அறிவிப்பு!

02



## தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் செல்வதா?

### ரணில் மறுப்பு - வேறொருவரை அனுப்ப யோசனை

● நா. தினுஷா

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தினூடாக நாடாளுமன்றம் செல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மறுத்திருப்பதாக அறியமுடிந்தது.

கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று நடந்த கலந்துரையாடலொன்றில் கருத்து வெளியிட்டுள்ள ரணில், மக்களின் வாக்குகளால் பல தசாப்தங்கள் நாடாளுமன்றம் சென்றுவிட்டு இப்போது தேசியப்பட்டியலில் செல்வதை தாம் விரும்பவில்லையென்று கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் கட்சியின் செயற்குழு இதுபற்றி கூடி இறுதி முடிவை எடுக்கவுள்ளதாக மேலும் தெரியவந்தது.


அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| சுப்பர் போல் | 1183 ஆவது வாரம் | 2020 ஜுலை 27ஆம் திகதி | O | 06 25 66 73 |
| அத கோட்டிபதி | 994 ஆவது வாரம் | 2020 ஜுலை 28ஆம் திகதி | S | 17 41 71 72 |
| கோட்டிபதி கப்ருக | 604 ஆவது வாரம் | 2020 ஜுலை 28ஆம் திகதி | E | 15 44 47 65 |
| சுப்பர் போல் | 1185 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 01ஆம் திகதி | G | 06 21 48 51 |
| அத கோட்டிபதி | 998 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 01ஆம் திகதி | Q | 05 31 63 65 |
| சனிதா வாசனா | 3345 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 01ஆம் திகதி | F | 26 45 56 62 |
| கோட்டிபதி கப்ருக | 606 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 02ஆம் திகதி | A | 22 29 33 76 |
| சுப்பர் போல் | 1186 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 02ஆம் திகதி | G | 24 50 54 60 |
| அத கோட்டிபதி | 999 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 02ஆம் திகதி | Z | 21 44 68 73 |
| சனிதா வாசனா | 3346 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 03ஆம் திகதி | Y | 16 21 31 70 |
| சுப்பர் போல் | 1187 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 03ஆம் திகதி | R | 22 34 41 53 |
| கோட்டிபதி கப்ருக | 607 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 04ஆம் திகதி | P | 14 48 55 76 |
| அத கோட்டிபதி | 1000 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 03ஆம் திகதி | G | 01 26 43 70 |
| அத கோட்டிபதி | 1001 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 04ஆம் திகதி | K | 07 33 49 52 |

# நாடாளுமன்றத்துக்கு 8 பெண் பிரதிநிதிகள் தெரிவு

புதிய நாடாளுமன்றத்துக்கு 8 பெண் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இவர்களில் அநேகமானோர் இரத்தினபுரி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களாவர்.

இந்த பெண் பிரதிநிதிகளில் 6 பேர் ஆளும்தரப்பை பிரதிநிதித்துவம் செய்யும் அதேவேளை, மிகுதி இருவரும் எதிர்தரப்பை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

அதற்கமைய, இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து அதிகளவான பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளதோடு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட பவித்ரா வன்னியாராச்சி மற்றும் முதிதா பிரசன்ன சொய்சா, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட தலதா அத்துகோரளை ஆகியோர் வெற்றியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக, பொதுஜன பெரமுனவின் சார்பில் காலியில் போட்டியிட்ட கீதா குமாரசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கேகாலையில் போட்டியிட்ட ராஜிகா விக்ரமசிங்க, கம்பஹாவில் போட்டியிட்ட கோகிலா குணவர்தன மற்றும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட ரோஹிணி குமாரி நவரத்ன ஆகியோர் வெற்றியீட்டியுள்ளனர்.

## தாமரை மொட்டின்...

நடந்து முடிந்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுள்ள தேசிய பட்டியலில் நியமிக்கப்படவுள்ளோர் பின்வருமாறு,

1. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்
2. அஜித் நிவாட் கப்ரால்
3. சட்டத்தரணி சாகல காரியவசம்
4. ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி
5. ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க
6. மஞ்சுளா விஜயகோன் திஸாநாயக்க
7. பேராசிரியர் ரஞ்சித் பண்டார
8. சரித்த ஹேரத்
9. கெவிந்து குமாரதுங்க
10. மொஹமட் முஸம்மில்
11. பேராசிரியர் திஸ்ஸ விதாரண
12. யதாமினி குணவர்தன
13. கலாநிதி சுரேன் ராகவன்
14. டிரான் அலஸ்
15. விசேட மருத்துவ நிபுணர் சீதா அரம்பேபொல
16. ஜயந்த கெட்டகொட
17. பளீல் மர்ஜான்

## அதிகப்படியான...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 5 இலட்சத்து 27 ஆயிரத்து 364 விருப்பு வாக்குகளை பெற்று சாதனை புரிந்துள்ளார்.

இந்தத் தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 11 ஆசனங்களை பெற்றுகொண்டுள்ளதோடு ஐக்கிய மக்கள் சக்தி 4 ஆசனங்களை பெற்றுகொண்டுள்ளது.

அதேபோன்று, ஐக்கிய தேசிய கட்சியின் குருநாகல் மாவட்ட வேட்பாளராக களமிறங்கியிருந்த அந்த கட்சியின் பொதுச் செயலாளரான அகில விராஜ் காரியவசம் தோல்வியடைந்திருந்துள்ளதோடு குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி எந்த ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் உறுப்பினர்கள் 115 பேர் புதிய நாடாளுமன்றத்துக்கு மீண்டும் தெரிவாகியுள்ள அதேவேளை கடந்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 73 பேர் இம்முறை தோல்வியை சந்தித்துள்ளனர். மேலும், புதிய நாடாளுமன்றத்துக்கு 58 புதிய முகங்கள் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதுஎவ்வாறாயினும், இவ்வாறு தோல்வியடைந்தவர்களில் அநேகமானோர் கடந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகித்த பிரதிநிதிகள் என்பதோடு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினூடாக போட்டியிட்ட வேட்பாளர்களில் அநேகமானவர்களே இம்முறை நாடாளுமன்றத்துக்கு புதிய முகங்களாக தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராஜா, கம்பஹாவில் அர்ஜுன ரணதுங்க உட்பட்ட ஏராளமான பிரமுகர்கள் இம்முறை தோல்வியடைந்துள்ளனர்.

அதேசமயம் கிழக்கிலிருந்து கொழும்பு வந்து போட்டியிட்ட சரத் வீரசேகர கொழும்பு மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவில் முதலிடத்தில் வந்துள்ளார். கம்பஹாவில் பிரசன்ன ரணதுங்கவை இரண்டாமிடத்துக்கு தள்ளி நாலக கொடஹேவா முதலிடம் வந்துள்ளார்.



# எதிர்வரும் காலங்களில் கட்சியை மறுசீரமைத்து புத்துயிர் வழங்குவோம்

## அகில விராஜ் கருத்து

'ஐக்கிய தேசியக்கட்சி அதன் ஆட்சிக்காலத்தில் நாட்டுமக்களுக்கு தேவையானதும் நீண்டகாலத்துக்கு நிலைத்து நிற்கக்கூடியதுமான வேலைத்திட்டங்களை அமுல்படுத்தியிருந்தாலும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பாரிய தோல்வியை சந்தித்துள்ளது.

ஆகவே, எதிர்வரும் சந்தர்ப்பங்களில் கட்சியை மறுசீரமைப்பது மாத்திரமல்லாமல் புத்துயிர் வழங்கி பலப்படுத்தி முன்னோக்கி கொண்டுச்செல்வதற்கு நடவடிக்கை எடுப்போம்' என்று அந்தக்கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது, நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தியமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணைக்குழுவுக்கு தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த பொதுத் தேர்தல் நீதியானதும் அமைதியானதுமான முறையில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கடந்த அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 19ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டமே துணைபுரிந்துள்ளது. மேலும், சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தல் நடத்துவதற்காக கடமையாற்றிய சகல அரச அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

கொவிட் - 19 நோய்த்தொற்றானது பொதுத்தேர்தலில் பெரும் தாக்கம் செலுத்தியிருந்தது. அது மாத்திரமல்லாமல் எமது பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. தேசிய பொருளாதாரத்தை உயிர்ப்பிப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் தேவையான வேலைத்திட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சியே முன்வைத்திருந்தது. இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில் கட்சியுடன் தொடர்ந்து இணைந்திருந்த சகல கட்சி ஆதரவாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாபெரும் மக்கள் பலத்தை பெற்றுள்ளது. கட்சி என்ற அடிப்படையில் கட்சிக்குள்ளேயும் வெளியிலிருந்தும் வரும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளோம். மற்றையவர்களால் ஏற்பட்ட அநீதிகளைப்போன்று குறைபாடுகளையும் நாங்களே பொறுப்பேற்றுக்கொண்டுள்ளோம்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் கொள்கைத்திட்டங்களை அடிப்படையாக கொண்ட அரசியல் கட்சிகளுக்கு அப்பால் சில அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இதனால், எதிர்காலத்தில் சிக்கலுக்குரிய அரசியல் நிலைமை ஏற்படும் என்றும் தேர்தல் முடிவுகளை அமைதியான முறையில் ஏற்றுக்கொள்ளுமாறு சகல மக்களிடமும் கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# சபைக்குத் தெரிவாகியுள்ள தந்தை - தனயன் ஜோடிகள்



மஹிந்த ராஜபக்ஷ - நாமல் ராஜபக்ஷ



சமல் ராஜபக்ஷ - சசீந்திர ராஜபக்ஷ



ஜனக்க பண்டார தொன்னக்கோன் - பிரமித்த பண்டார தென்னக்கோன்

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தந்தையர்களையும் தனயன்களையும் உள்ளடக்கிய வகையில் மூன்று ஜோடிகள் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் சசீந்திர ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் மற்றும் அவரது மகன் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோரே நாடாளுமன்றத்துக்கு இவ்வாறு தெரிவாகியுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் ராஜித சேனாரத்னவும் அவரது மகன் சத்துர சேனாரத்னவும் உறுப்பினர்களாக தெரிவாகியிருந்த போதிலும், இம்முறை சத்துர சேனாரத்ன நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசுடன்...

ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்று இலங்கை மக்கள் அடிப்படை ஜனநாயக உரிமையொன்றை பயன்படுத்தி, தங்களது அடுத்த நாடாளுமன்றத்தை தெரிவுசெய்வதற்கு வாக்களிக்கச் சென்றனர்.

கொவிட் -19 தொற்றுப் பரவலினால் முகங்கொடுக்க நேர்ந்த சவால்களுக்கு மத்தியிலும் கூட அமைதியான மற்றும் ஒழுங்கான முறையில் தேர்தலை நடத்தியமை தொடர்பில் இலங்கையை அமெரிக்கா பாராட்டுகிறது.

புதிய நாடாளுமன்றம் கூடுகின்ற நிலையில், அனைவரையும் உள்வாங்கிய பொருளாதார மீட்சியை கட்டியெழுப்புவதற்கும் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும் மற்றும் நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதற்குமான தமது உறுதிப்பாடுகளை புதிய அரசாங்கம் புதுப்பிக்கும் என்று நாம் நம்புகிறோம்.

அரசாங்கத்துடனும் புதிய நாடாளுமன்றத்துடனும் இணைந்து பணியாற்ற நாம் எதிர்பார்க்கிறோம்.

இலங்கை பொதுத் தேர்தல் தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த் தேசியக்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்திருக்கும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தருமாறு கோரி தேர்தலில் தோல்வியடைந்த பலர் கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளதாக அறியமுடிகின்றது.

தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன், திருமதி சசிகலா ரவிராஜ், குகதாசன் ஆகியோரில் ஒருவருக்கு அதனை வழங்குமாறு ஒருசாரார் கட்சித் தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் இதுவிடயத்தில் கட்சித் தலைவர் சம்பந்தன் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக தெரிகிறது.

கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் வருகையால் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவமும் தமிழ்ப் பிரதிநிதித்துவமும் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திற்கு அந்த தேசியப்பட்டியலை வழங்க சம்பந்தன் உத்தேசித்துள்ளதாக அறியமுடிந்தது.

இதுகுறித்து அம்பாறை மாவட்ட பிரதிநிதிகளுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்றும் சொல்லப்பட்டது.

## வடக்கு கிழக்கில்...

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நேர்மையான தேர்தல் நடக்கவில்லையென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று திருகோணமலையிலிருந்து எமது செய்தியாளரிடம் தொலைபேசியூடாக கருத்து வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது, நாங்கள் தேர்தல் முடிவுகளை மதிக்கிறோம். அதனை ஏற்கிறோம். தமிழர்கள் இலங்கையில் மட்டுமல்ல குடிபெயர்ந்த நிலையில் வெளிநாடுகளில் இலட்சக்கணக்கானோர் இருக்கின்றனர். அவர்களின் உணர்வுகள் எங்களுக்குத் தெரியும். இங்கே சில இடங்களில் மக்கள் தமது கொள்கைகளில் உறுதியாக இருந்தாலும் பலர் பெரும்பான்மை கட்சிகளை ஆதரித்திருப்பதுவும் வேதனைக்குரியது. அது மக்களின் பலவீனம் அல்ல. அதற்காக நாங்கள் மக்களை குறைகூறவில்லை. ஆளுங்கட்சியில் நாங்கள் இல்லை. ஆனால் எங்களில் குறைபாடுகள் சில உள்ளன.அவற்றை நாங்கள் சீர்தூக்கிப் பார்ப்போம். சரிசெய்வோம்.

பெரிய கட்சிகள் சார்பில் மக்களுக்கு பொய் வாக்குறுதிகள், மதுபானம், இதர உதவிகளை செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதியான தேர்தல் நடக்கவில்லை. ஆளுங்கட்சி அங்கு பல யுக்திகளை கையாண்டது. அதைப்பற்றி நாடாளுமன்றத்தில் நாங்கள் பேசுவோம். அரசியல் ரீதியாக கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் எதிர்காலத்தில் தமிழ்த் தரப்புகள் அனைத்துடனும் கூட்டமைப்பு பேச்சு நடத்தி சமூகத்தின் நன்மைக்காக செயற்படும். தமிழ் மக்களை அதிகளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற ரீதியில் புதிய அரசியல் சாசனத்திற்கு முன்னுரிமை, அரசியல் தீர்வு என்பவற்றுக்கான எமது கவனயீர்ப்பு தொடர்ந்து இருக்கும் என்றார் சம்பந்தன்.

## மூன்றிலிரண்டு...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனதாக்கிக் கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனிக் கட்சியாக 128 ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன், தேசிய பட்டியல் ஊடாக அந்த கட்சிக்கு மேலும் 17 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மொத்தமாக 145 ஆசனங்கள் இந்த முறை தேர்தலின் ஊடாக கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் இறுதிப் பெறுபேறு அறிக்கை தெரிவித்தது. இலங்கை நாடாளுமன்றத்தில் மொத்தமாக 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இதன்படி, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்வதற்கு கட்சியொன்று 150 ஆசனங்களை பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இவ்வாறான பின்னணியில், 145 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மேலும் சில கட்சிகள் இணையவுள்ளன.

குறிப்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்ட சில கட்சிகள், இந்த தேர்தலில் தனித்து போட்டியிட்டிருந்தன.

இதன்படி, வடக்கு மாகாணத்தில் தனித்து போட்டியிட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 61 ஆயிரத்து 464 வாக்குகளை பெற்று இரண்டு ஆசனங்களை தனதாக்கிக் கொண்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கைக்கோர்த்து, யாழ்ப்பாணத்தில் மாத்திரம் தனித்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அங்கு ஒரு ஆசனத்தை பெற்றுக்கொண்டுள்ளது.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ந்தும் கைகோர்த்து மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினரான சிவநேசத்துரை சந்திரகாந்தன் சிறைவாசம் அனுபவித்து வருகின்றபோதும் சிறையிலிருந்தபடியே (பிள்ளையான்) அந்த மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் தனித்து போட்டியிட்டு ஒரு ஆசனத்தை கைப்பற்றியுள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கைகோர்த்து செயற்பட்ட தேசிய காங்கிரஸ் ஒரு ஆசனத்தை இந்த முறை தேர்தலில் கைப்பற்றியுள்ளது.

ஏற்கனவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கைக்கோர்ந்து செயற்பட்டுவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகியன பெற்றுக்கொண்டுள்ள ஆசனங்களுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்ட ஆசனங்களை சேர்க்கும் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அந்த கட்சி மிக இலகுவாக பெற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் ஆதரவுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் புதிய அரசு அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### -புதிய அரசுக்கான ஏற்பாடுகள்-

புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நாளை களனி விகாரையில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.நாளை மறுதினம் திங்கட்கிழமை கண்டியில் புதிய அமைச்சரவை பதவியேற்கிறது.

புதிய அமைச்சரவை பிரதமருடன் 26 பேராக வரையறை செய்யப்பட்டுள்ளதுடன், பலரின் இலாகாக்கள் மாற்றம் செய்யப்படவுள்ளன. அமைச்சுக்களின் கீழுள்ள விசேட பொறுப்புக்களை இளவயது எம்.பி.க்களுக்கு வழங்க ஜனாதிபதி திட்டம் வகுத்துள்ளார்.

பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் டக்ளஸ் - அதாவுல்லாஹ் ஆகியோருக்கு முக்கிய அமைச்சுகளை வழங்க ஆலோசனை செய்யப்படுகிறது. பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சுகள் பிரதமர் மஹிந்தவின் கீழ் வரவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்று அமைச்சுக்கள் வழங்கப்படவுள்ளன. கல்வி - சுகாதாரம் - துறைமுகம் - விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கு புதுமுகங்கள் நியமிக்கப்படவுள்ளன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கும் முக்கிய அமைச்சுப் பொறுப்பு ஒன்றை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அநேகமாக மகாவலி அபிவிருத்தி அமைச்சு அவருக்கு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கிங் மேக்கர்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றியை பற்றி பேசும்போது அதன் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவை பற்றி பேசாமல் இருக்க முடியாது. அமைதி, சாதுர்யம், இராஜதந்திரம், மதிநுட்பம், அரசியல்ஞானம், நட்புறவு, கணிப்பு என்ற பல்துறை திறமைகளைக் கொண்ட பசில் ராஜபக்ஷ, 2015 ஜனாதிபதி தேர்தலின்போது பலராலும் பரிகசிக்கப்பட்டார். அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் தோல்விக்கு இவரே காரணமென வெளியில் மட்டுமல்ல கட்சிக்குள்ளும் வசைபாடப்பட்டது. அந்த தேர்தல் முடிந்த கையோடு அமெரிக்கா சென்ற இவரை நாட்டிலிருந்து தப்பியோடினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆனாலும் அனைத்து விமர்சனங்களையும் தாங்கி, நாடு திரும்பி சிறைக்கும் சென்று வந்து பொதுஜன பெரமுன என்று தனிக்கட்சியை ஆரம்பித்து உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிக்கொடியை நாட்டினார். புதுக்கட்சி ஆரம்பிப்பவர்களை வீதி வீதியாக அலைக்கழிக்க வைப்பேன் என்று அப்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மேடைகளில் கொக்கரித்தபோதும் அவற்றை கணக்கிலெடுக்காமல் வேலைகளை பார்த்து கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் கோட்டா வெற்றிக்கொடி நாட்ட பங்களிப்பை செய்தவர்.

அதன்பின்னர், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் தனது கட்சி அமோக வெற்றிபெற காரணமாகி, அமைதியாக பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் பசில், தேர்தல் காலங்களில் கூறும் கணிப்புகள் பெரும்பாலும் சரியாகவே நடக்கும். இந்த தேர்தலில் பொதுஜன பெரமுன பெறும் வாக்குகளில் அரைவாசியை கூட அதற்கு அடுத்தபடியாக வரும் கட்சி பெறாதென தேர்தல் நடைபெறவிருந்த சில தினங்களுக்கு முன்னர் பசில் தெரிவித்திருந்தார். அதேபோல் தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) கூடுதலான வாக்குகளை பெறுமென்றும் பாரம்பரிய அரசியல் கட்சிகள் பெரும் பின்னடைவைச் சந்திக்கலாமென்றும் அவர் கூறியிருந்தார். அவை அப்படியே நடந்திருக்கின்றன. அரசில் எந்த பொறுப்புகளையும் ஏற்காமல், பதவி பட்டங்களுக்கு ஆசைப்படாமல், 2015 இல் கிட்டிய சரிவை சீர்செய்து, விமர்சனம் செய்தவர்களுக்கு பதிலடி கொடுத்த பசிலை கிங் மேக்கர் என்று கூறாமல் வேறெப்படி கூறுவது?

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

2020 ஓகஸ்ட் 08ஆம் திகதி, சனிக்கிழமை

## மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு!

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியிருக்கிறது. அதற்கு அடுத்த படியாக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களையும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 10 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) தலா இரண்டு ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி, எங்கள் மக்கள் சக்தி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் தேசிய முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தலா ஒரு இடங்களையும் பெற்றுள்ளன.

பொதுஜன பெரமுனவே நினைத்துப்பார்க்க முடியா தளவுக்கு அவர்களுக்கு இந்த அமோக வெற்றி கிடைத்த தென்றே கருதவேண்டியிருக்கிறது. சுமார் 130 ஆசனங் கள் வரைதான் தேசியப்பட்டியலுடன் கிடைக்குமென அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பொதுவெளியில் கூறினாலும் அதனைவிட அவர்களுக்கு மேலதிகமாக ஆசனங்கள் கிடைத்துள்ளன. கொரோனா வைரஸ் சூழ்நிலையிலும் மக்களின் இந்த ஏகோபித்த வாக்களிப்பென்பது வரவேற்கக்கூடியது. ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது.

இந்தத் தேர்தல் பல செய்திகளை ஊருக்கும், உலகத்துக்கும் சொல்லிவைத்திருக்கிறது. நீண்ட அரசியல் பாரம்பரியத்தைக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, அதற்கு அடுத்தபடியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன இந்தத் தேர்தலில் விலாசமில்லாமல் போயுள்ளன. அதேபோல வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பின்ன டைவைச் சந்தித்திருக்கிறது. கடந்த ஆட்சிக்காலத்தில் மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் கண்டுகொள் ளாமை, கட்சித் தலைமைகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள், செய்யவேண்டிய வேலைகளை செய்யாமல் விட்டுவிட்டு தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள் முன் வந்து அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று கூறும் அவ்வகையான அரசியல் கட்சிகளுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் சாட்டையடி கொடுத்திருக்கின்றனர் மக்கள்.

எதிர்பார்க்கவே முடியாத அரசியல் தலைவர்கள் தோல்வியை தழுவியுள்ளனர். அவர்களின் அரசியல் அனுபவங்களை அல்லது அவர்களின் கல்வித் தகைமை களை மக்கள் பார்க்கவில்லை. சாதாரண அடிப்படைப் பிரச்சினைகளை அவர்களால் தீர்க்க முடிந்ததா அல்லது எப்போதும் போலவே பழங்கதைகளையே அவர்கள் கூறுகிறார்களா என்று சீர்தூக்கிப் பார்த்தே முடிவை வாக்களிப்பில் தெரிவித்திருக்கிறார்கள் மக்கள். இது ஒரு பக்கம். மறுபக்கம் பார்த்தால் இந்தத் தேர்தலில் கணிசமான தமிழ் பேசும் மக்கள் பொதுஜன பெரமுனவுக்கும் வாக்களித்திருக்கின்றனர். கடந்த பொதுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், தமிழர் பகுதிகளில் பெரமுனவின் வாக்குவங்கியில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நன்கு ஆராய்ந்து பார்த்தால், இந்தத் தேர்தல் நல்ல பல படிப்பினைகளை வழங்கியிருக்கிறது. அவற்றிலிருந்து பாடங்களை அரசியல் கட்சிகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

சரி! மக்களின் அமோகமான தீர்ப்பு கிடைத்தாயிற்று. இனி பொதுஜன பெரமுன ஆட்சியமைக்கப் போகிறது. கிட்டத்தட்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கவுள்ள இந்த அரசு மக்களின் தீர்ப்பை மதித்து சிறந்த ஆட்சியொன்றை முன்னெடுக்க வேண்டும். ஜனாதிபதி ஒரு கட்சியிலும் பிரதமர் வேறு கட்சியிலும் இருந்தால் நல்ல ஆட்சியொன்றை முன்னெடுக்க முடியாதென்றும், கடந்த நல்லாட்சி நாசமாய்ப் போனதற்கு அதுவும் ஒரு காரணமெனவும் பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் தேர்தல் மேடைகளில் கூறிவந்தனர். குறிப்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை மக்களிடம் நேரடியாகவே தெரிவித்து வந்தார். அந்தக் கோரிக்கைக்கும் மக்கள் தேர்தல் வாக்களிப்பில் பதில் வழங்கியுள்ளனர்.

கொரோனா வைரஸ் கட்டுப்பட்டு நடவடிக்கையில் ஜனாதிபதி கோட்டா நடந்துகொண்ட விதம் பெரும்பான்மையான மக்களை ஈர்த்திருக்கிறதுபோல தெரிகிறது. அப்படியே பாதாள உலகக் கோஷ்டிகள் ஒழிப்பு, இலஞ்ச ஊழல் மோசடிகள் ஒழிப்பு, நேர்மையான அரச சேவை, பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்களில் ஜனாதிபதியின் ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு ஒத்துழைக்கும் வகையில் வாக்குகள் பெரமுனவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகப் படுகிறது. மக்களின் இந்தத் தீர்ப்பை சிறந்த நிர்வாகியாகத் திகழும் கோட்டா, அதற்கேற்ப அமைச்சரவையை உருவாக்கி முன்னெடுக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் விட பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கவுள்ள அரசு, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான, தமிழர் அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடிய நிரந்தர தீர்வொன்றை வழங்க முன்வரவேண்டும். சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைக்கொண்டு அமைக்கப்படவுள்ள அரசு, அந்த மக்களுக்கு நிலைமையை விளக்கி, தமிழ் பேசும் மக்களும் இந்த நாட்டின் சமவுரிமை கொண்டவர்களே என்பதை எடுத்துக் கூறி அவர்களின் இணக்கத்தையும் பெற்று தீர்வை வழங்க முன்னுரிமை அடிப்படையில் செயற்படவேண்டும். இதனை அரசு செய்வதற்கான அழுத்தத்தை இப்போது எதிர்க்கட்சியிலுள்ள அரசியல் தரப்புகள் ஓரணியில் நின்று வழங்கவேண்டும்.

அப்படியில்லாமல், தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கிறதா, தமிழ் பேசும் மக்களுக்கு என்ன குறை என்று புதிய அரசும் நினைக்குமானால் தமிழ்பேசும் மக்கள் சமூகம் தமது விதியை நொந்துகொள்வதைத் தவிர வேறெதைச் செய்யமுடியும்? மக்கள் தீர்ப்பு மக்களின் தீர்வுக்கும் வழிசமைக்கட்டும்!




# சமாதிகள் எழுப்பப்படாத சுடுகாடு!

ஹிரோஷிமாவில் அணுகுண்டுவெடிப்பில் மடிந்தவர்களுக்கு நினைவுச்சின்னம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நினைவிடத்தில், 'இனி எப்போதும் இப்படிப்பட்ட கொடூரத்தை நடக்க விடமாட்டோம்' என பொறிக்கப்பட்டுள்ளது.

அப்பாவி மக்கள், குழந்தைகள், முதியவர்கள் என எந்தக்' கரிசனமுமின்றி அமெரிக்கா நடத்திய முதல் அணுகுண்டுத் தாக்குதலின் 75ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுமுன்தினம் (6ஆம் திகதி) அனுஷ்டிக்கப்பட்டது.

இங்கு உயிரிழந்தவர்களின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவிடத்தில், 'இனி எப்போதும் இப்படிப்பட்ட கொடூரத்தை நடக்கவிட மாட்டோம்" என குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அந்தக் கொடூரம் நிகழ்ந்து முக்கால் நூற்றாண்டு முடிந்து பின்னரும் கூட இலங்கை – பலஸ்தீனம் – ஆப்கானிஸ்தான் என தொடர்ந்து இந்தக் கொடூரம் அரங்கேறிக்கொண்டே இருக்கிறது. இந்நிலையில், அழிவுக்குள்ளான ஹிரோஷிமா – நாகசாகி நினைவுகள் இங்கே பகிர்க்கப்படுகிறது.

1945 ஓகஸ்ட் 6 காலை 8 மணி. அன்று காலை வழக்கம்போல் ஜப்பானின் துறைமுக நகரான ஹிரோஷிமா நகரமும் துயில் கலைந்து பரபரப்பாகிக்கொண்டிருந்தது. எல்லோரும் காலை பரபரப்பில் இருந்த நேரம். பிள்ளைகள் பாடசாலைக்குப் போகத் தயார் நிலையில் அப்பா, சில வீட்டில் அம்மாவும், வேலைக்குப் போக தயார் நிலையில். தாய்மார்கள் மதிய உணவும் காலை உணவும் தயாரிக்கும் மும்முரத்தில். திடீரென ஒலித்தது சைரன். எதிரி விமானத் தாக்குதலுக்கான எச்சரிக்கை. விமானம் எங்கு குண்டுபோடுமோ, யார் யார் மடிவார்களோ என்ற அச்சமும் பீதியும் அனைவரையும் வாட்டியது.

விமானத்திலிருந்து குண்டு விழும். பெரும் சப்தம் கேட்கும் என எதிர்பார்ப்புடன் இருந்த அனைவரும் சற்றே அச்சத்தில் ஆழ்ந்தனர். தலைக்கு மேலே இரண்டு விமானங்கள் பறந்தன. எங்கு குண்டு விழுமோ என அச்சப்பட்டு அண்ணாந்து பார்த்தவர் வியப்பில் ஆழ்ந்தனர். முதலில் வந்த விமானம் பூசணிக்காய் போன்ற ஏதோ ஒன்றைப் பெரசூட்டின் மூலம் கீழே போட்டுவிட்டுச் சென்றுவிட்டது. இரண்டாவது விமானம் அங்கேயே வட்டமடித்துக் கொண்டிருந்தது. சிலர் விமானத்திலிருந்து ஏதோ விழுகிறதே என வேடிக்கை பார்த்து நின்றனர் அடுத்து ஏற்படப்போகும் அவலத்தை அறியாமல்.

இந்த குண்டுவெடிப்புகள் குறித்து அங்கு சென்ற பார்வையாளர்கள், "சமாதிகள் எழுப்பப்படாத சுடுகாடாக ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் காணப்பட்டன" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

விமானத்திலிருந்து விழுந்த குண்டு வெடிக்கவில்லை. பெரும் சப்தம் எதுவும் எழும்பவில்லை. ஆனால், எங்கும் பரவியது பெரும் ஒளி. கண்ணை கூசும் ஒளி. ஒளியின் பிரகாசம் அவ்வளவு அதிகமாக இருந்ததால் நிழல் கூட ஏற்படவில்லை. ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு ஒளிவீச்சு. ஒளிவீச்சுக்குப் பிறகு சுமார் 2,000 அடி உயர்ந்த புகை தூசு மண்டலம் தென்பட்டது. வானம் இருண்டது. அதுவரை தெளிவாக இருந்த வானம் முற்றிலும் தூசு படிந்து இரவுபோல் ஆகியது.

ஒளிவீச்சு பட்டவர்கள் திடீரென வலியை உணர்ந்தனர். அவர்களது ஆடைகள் எரிந்து சுற்றும் முற்றும் வீடுகள் இடிந்துபோயிருந்தன. கண்ணாடி உடைந்து சிதறி பலர் காயமடைந்தனர். அந்த நகரமே அழிந்துபோயிருந்தது. எல்லாம் ஒருசில விநாடிகளில். ஒளிவீச்சு அடங்கியதும் எங்கும் பரவியது பெரும் தீ. சற்றுநேரத்தில் நகரின் மையப்பகுதி பெரும் தீயில எரிகின்ற பொருட்கள் எல்லாம் தாமே எரியத் துவங்கின. மனிதர்களின் தோல் கூட அனலில் வெந்து உரிந்தது.

குண்டுவீச்சின் மையப்பகுதியில் கனநேரத்தில் ஆயிரக்கணக்கானோர் சட்டென்று பஸ்பமாகினர். அவர்களது எலும்பு கூட மிஞ்சவில்லை. எல்லாம் கன நொடியில் எரிந்தது. சாம்பல் கூட மிஞ்சாமல் போயிற்று. அவ்வாறு மடிந்தவர்கள் பெரும் வேதனையும் வலியும் இல்லாமல் இறந்துபோயினர். ஆனால், குண்டுவீச்சின் மையப்பகுதிக்கு சற்றே விலகி இருந்தவர்கள் தீயிலும் இடிபாடுகளிலும் பட்டு வலி வேதனையுடன் மடிந்தனர். எங்கும் அவலக்குரல். காப்பாற்ற, உதவிக்கரம் நீட்ட ஒரு ஆள் கூட மிஞ்சவில்லை.

ஹிரோஷிமாவில் குண்டு விழுந்த இடத்திலிருந்து சுமார் 280 மீற்றர் சுற்றளவுக்குள் இருந்த கல்லையும் மண்ணையும் தவிர, எரியக்கூடிய பொருட்கள் அனைத்தும் ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் சாம்பலாகின. அணுகுண்டிலிருந்து வெளிப்பட்ட வெப்பத்தின் அளவு 3 இலட்சம் டிகிரி செல்சியஸ்



> **"தீ ஜுவாலை அணைந்தவுடன் அடர்த்தியான நச்சுக் கரும்புகை மேகங்களாக உயரத்தில் உருவெடுத்து உலவின. சற்றுநேரத்தில் மழை பொழியத் துவங்கியது. ஆகா, வெப்பத்தைத் தணிக்க மழையாவது பெய்கிறதே என மகிழ்ந்து மழையில் நனைந்தவர்கள் எல்லாம் முட்டாளாகினர். பெய்தது கருநிற அமில மழை. மழைத்துளிகளில் கதிரியக்கத் துகள்கள் இருந்ததுதான் அமில மழைக்குக் காரணம். மழைபட்டவர்கள் உடல் அமிலத்தில் அழிந்து"**

என்கிறார்கள். அடுத்த ஒரு விநாடியில் 280 மீற்றர் சுற்றளவுக்குப் பரவிய வெப்பத்தின் அளவு 4 முதல் 5,000 டிகிரி செல்சியஸ். நகரத்திற்கு 2,000 அடிகளுக்கும் மேல் தீப்பிழம்புகள் தெரிந்தன. மொத்தத்தில் சுமார் 16 கிலோமீற்றர் நிலப்பரப்பில் இருந்த அனைத்தும் முழுமையாக அழிந்தன. கட்டடங்கள் தரைமட்டமாயின. குண்டுவெடித்த சில நிமிடங்களில், கனத்த புழுதி மேகங்களும் புகையும் வானில் நிரம்பி பகல் இருண்டது.

ஹிரோஷிமா நகரை அணைத்துக்கொண்டு இரண்டு ஆறுகள் ஓடின. அணுகுண்டு வெடித்தவுடன் ஏற்பட்ட வெப்பத்தைத் தணிக்க இந்த ஆறுகளுக்கு அருகிலிருந்தவர்கள் அனைவரும் ஆழத்தைப் பற்றிய பயமே இல்லாமல் சரமாரியாகக் குதிக்க ஆரம்பித்தனர். ஆணா, பெண்ணா, உடலில் துணி இருக்கிறதா, இல்லையா, தனக்கு அடியில் இருக்கும் உடலில் உயிர் இருக்கிறதா, இல்லையா, எவருக்கும் எந்த நினைப்பும் இல்லை. வெப்பத்தை எப்படியாவது குறைத்தால் போதும் என்று எண்ணி, தொங்கிக்கொண்டிருக்கும் சதைகளுடன் ஆற்றில் குதித்த பிறகுதான் தெரிந்தது, ஆற்றுநீரும் கொதித்துக்கொண்டிருக்கிறது என்று.

தீ ஜுவாலை அணைந்தவுடன் அடர்த்தியான நச்சுக் கரும்புகை மேகங்களாக உயரத்தில் உருவெடுத்து உலவின. சற்றுநேரத்தில் மழை பொழியத் துவங்கியது. ஆகா, வெப்பத்தைத் தணிக்க மழையாவது பெய்கிறதே என மகிழ்ந்து மழையில் நனைந்தவர்கள் எல்லாம் முட்டாளாகினர். பெய்தது கருநிற அமில மழை. மழைத்துளிகளில் கதிரியக்கத் துகள்கள் இருந்ததுதான் அமில மழைக்குக் காரணம். மழைபட்டவர்கள் உடல் அமிலத்தில் அழிந்து. ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டுக்கு பிறகு அடுத்த 3 நாட்களில் ஓகஸ்ட் 9 அன்று நாகசாகியில் இரண்டாவது அணுகுண்டு போடப்பட்டது. இந்த அணுகுண்டுவெடிப்பில் சுமார் ஒரு இலட்சம் பேர் மடிந்தனர்.

ஹிரோஷிமா மீது வீசிய அணுகுண்டுக்கு அமெரிக்கா விளையாட்டாக வைத்த பெயர் 'சின்னப் பையன்' **(LITTLE BOY)** என்பதாகும். இரு நாட்கள் கழித்து, நாகசாகி நகரத்தின் மீது போடப்பட்ட அணுகுண்டுக்கு 'குண்டு மனிதன்' **(FAT MAN)** என்று பெயர் சூட்டினர்.

அன்று ஹிரோஷிமாவில் இருந்தவர்களுக்கு தெரியாது, தமது நகரத்தின் மீது விழுந்தது அணுகுண்டு என்று. அணுகுண்டுவீச்சுக்குள்ளான முதல் நகரம் ஹிரோஷிமா. நகரின் மொத்த மக்கள்தொகையான 3.5 இலட்சம் பேரில் சுமார் 70,000 பேர் அந்த சில நிமிடங்களில் மடிந்தனர். இந்த குண்டுவீச்சு காரணமாக மேலும் 70,000 பேர் அடுத்த சில நாட்களில் மடிந்தனர்.

இதேபோல நாகசாகியில் சுமார் 74,000 மக்கள் மடிந்தனர். இந்த அகோரக் குண்டுவீச்சினால் ஏற்பட்ட சாவும் சேதமும் இன்றுவரை துல்லியமாக மதிப்பிட முயன்றும் முடியவில்லை. வரலாறுகாணாத சேதாரம் என்று மட்டுமே சொல்ல முடியும். இடிபாடுகளுக்கிடையே சிக்கிக்கொண்டு வெளியே வரவும் முடியாமல், முழுதாக உயிரும் போகாமல் பலர் அவலமாக மடிந்தனர். இந்தக் குண்டுவெடிப்புகள் குறித்து அங்கு சென்ற பார்வையாளர்கள், "சமாதிகள் எழுப்பப்படாத சுடுகாடாக ஹிரோஷிமா நாகசாகி நகரங்கள் காணப்பட்டன" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொடூர செயலை அரங்கேற்றிய அமெரிக்க அரசு, தனது அறிக்கையில் இந்த அணுகுண்டு வீச்சினால்தான் 2ஆம் உலக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

அணுகுண்டை ஜப்பான் மீது போட்டு பேரழிவை உண்டாக்காமலிருந்திருந்தால் 2ஆம் உலக யுத்தம் இன்னும் பல மாதங்கள் நீடித்திருக்கும். அதன்மூலம் இதனைவிட அதிகமான மக்கள் இறந்திருப்பர். பரவலாக மக்கள் சாகாமல் பார்த்துக்கொண்டது அமெரிக்கா என்று குறிப்பிட்டது. நெஞ்சு பதறும் இப்படுபாதகப் படுகொலையை நியாயப்படுத்தும் அமெரிக்க அரசின் நிலை குறித்து பெரும் சர்ச்சை உலகெங்கும் இன்றும் தொடர்கிறது.


குழந்தைகள், பொதுமக்கள், மூப்படைந்தோர் என பல்லாயிரக்கணக்கானோர் மடிந்த ஹிரோஷிமாவில் அணுகுண்டுவெடிப்பில் மடிந்தவர்களுக்கு நினைவுச்சின்னம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்த நினைவிடத்தில் "இனி எப்போதும் இப்படிப்பட்ட கொடூரத்தை நடக்கவிட மாட்டோம்' என பொறிக்கப்பட்டுள்ளது.

ஆம். இனி இதுபோன்ற கொடூரங்களுக்கு எதிராக உலக சமாதானம், உலக சமத்துவம், உலக சூழல் பாதுகாப்பு, நிலைத்தகு வளர்ச்சியை வலியுறுத்தி போராடுவதுதான் இந்த ஹிரோஷிமா தினத்தில் நாம் மேற்கொள்ளவேண்டிய சபதம்".

***நன்றி - விகடன்***



## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



*தேர்தலில் யூ.என்.பி.க்கு ஒரேயொரு தேசியப் பட்டியல் தான் கிடைச்சிருக் கிறதே? அது யாருக்கு செல்லும் என்று நேற்றுக் காலை நண்பர் ஒருவர் என்னிடம் தொலைபேசியில் கேட்டார். சரி இதை யாரிடம் போய் கேட்பது? அவர்கள் இருக்கும் நிலையில் ரணிலிடம் கேட்பதா? அல்லது செயலாளர் அகிலவிடம் கேட்பதா? தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு இது ஒரு பெரும் பிரச்சினை... வெற்றிய டைந்தவர்களிடம் பேசலாம்... தோல்வி யடைந்தவர்களிடம் பேசுவதெப்படி? டென்ஷனில் இருப்பார்களே?*

*சரி... அதை விடுவோம்... அந்த தேசியப் பட்டியலுக்கு யார் போவார்கள் என்று கேட்டால் அதற்கு ரணில் போவார் என்றுதான் பலர் நினைக்கின்றனர்... ஆனால், அதற்கே பெரும் அடிபாடு நடக்கிறதாம்... நடக்கட்டும் நடக்கட்டும்....*

- சிவா -
siva@liberty.lk

# வன்னி தேர்தல் தொகுதியில் இழப்பை சந்தித்த கூட்டமைப்பு

(வவுனியா)

இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்து நாடாளுமன்ற உறுப்பினர்களது பெயர்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பிரதிநிதித்துவம் குறைந்துள்ளது.

2004 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் பங்களிப்புடன் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 22 நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்ட நிலையில், 2010 ஆம் ஆண்டு 14 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருந்தபோதிலும் 2015 ஆம் ஆண்டு 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருந்தனர்.

இந்நிலையில், நல்லாட்சி அரசு காலத்தில் அரசாங்கத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கு மறைமுகமாக ஆதரவளித்ததனூடாக கடும் விமர்சனங்களை சந்தித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்திருந்தது.

வடக்கு, கிழக்கில் 10 ஆசனங்களைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி தேர்தல் தொகுதியில் 3 ஆசனங்களை மாத்திரமே பெற்றுள்ளது.

கடந்த முறை செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வைத்தியகலாநிதி சி.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் என தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசியப் பட்டியலினூடாக சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவும் நாடாளுமன்றப் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இதன் காரணமாக வன்னியில் 5 நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துடன் செயற்பட்ட கூட்டமைப்பு இம்முறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோருடன் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய சிவசக்தி ஆனந்தனையும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்திலிருந்து வன்னி வாக்காளர்கள் நிராகரித்துள்ளனர்.

இதன் காரணமாக 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தோல்வியுற்றிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகதாரலிங்கம் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வன்னியில் கடும் சவாலாக காணப்பட்ட பொதுஜன பெரமுனவின் முதன்மை வேட்பாளரான கே.கே.மஸ்தானும் இரண்டாவது தடவையாகவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து 40 நாட்களில் தேர்தலை சந்தித்திருந்த மஸ்தான் சுதந்திரக் கட்சியில் சிறுபான்மை இனங்களில் வெற்றிபெற்ற ஒரு வேட்பாளராக காணப்பட்டிருந்தார் என்பதுடன், இடையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் 53 நாட்கள் பிரதியமைச்சராகவும் செயற்பட்டிருந்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியினூடாக இம்முறை வன்னியில் களமிறங்கிய ரிஷாட் பதியூதீன் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் மீள்குடியேற்ற அமைச்சராகவும் நல்லாட்சி காலத்தில் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சராகவும் இருந்த ரிஷாட் பதியூதீன் வில்பத்து காடழிப்பு விவகாரம், ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் விடயங்கள் தொடர்பில் கடும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவரும் நிலையில் வன்னியில் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்துள்ளார்.

இதேவேளை, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட கு. திலீபன் வேறு எந்தத் தேர்தலிலும் போட்டியிடாது நேரடியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் வவுனியாவில் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்தின் வெற்றிக்காக செயற்பட்ட கு.திலீபன் பின்னர் அவருடன் ஏற்பட்ட மனக்கசப்பினால் அங்கிருந்து வெளியேறி ஈ.பி.டி.பி.யுடன் இணைந்து செயற்பட்டு வவுனியாவில் மக்கள் ஆதரவின்றி காணப்பட்ட ஈ.பி.டி.பி. கட்சியை பல சமூக வேலைத்திட்டங்களினூடாக மக்கள் மத்தியில் கொண்டுசென்றிருந்தமையால் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

# ரவிராஜின் உருவச்சிலை கறுப்புத்துணியால் மறைப்பு



(யாழ் நிருபர்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் இ.ரவிராஜின் உருவச்சிலையின் முகப்பகுதி கறுப்புத்துணியால் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

நடைபெற்று முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான படுகொலைசெய்யப்பட்ட இ.ரவிராஜின் பாரியார் சசிகலா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்யப்பட்டு திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் என சமூக வலைத்தளங்களில் குற்றச்சாட்டுகள் எழுந்ததையடுத்து, சசிகலாவும் தான் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாமனிதர் இ.ரவிராஜின் உருவச்சிலையின் முகப்பகுதி கறுப்புத்துணியினால் மூடப்பட்டுள்ளதுடன், கைகள் மற்றும் கால்கள் சிவப்பு, மஞ்சள் துணியால் கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் விசாரணைகளை நடத்தவேண்டும் எனவும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவிடம் சசிகலா ரவிராஜ் முறையிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## காரைதீவு கிராமத்தில்

# வீதியில் பட்டாசு கொளுத்தி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்




( காரைதீவு )


நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்கள் தேர்தலில் அமோகமாக வெற்றிபெற்றதையடுத்து காரைதீவு கிராம மக்கள் - கட்சி ஆதரவாளர்கள் வீதியில் பட்டாசு கொளுத்தி கோஷமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் .

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்கள், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது; எங்களை வெற்றிபெறச் செய்வதற்காக கடந்த ஒரு மாத காலமாக எம்மோடு இணைந்து பாடுபட்ட அனைத்து தமிழ் ஆதரவாளர்களுக்கும் வாக்களித்த அனைத்து வாக்களர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அம்பாறை தமிழ்ப் பிரதிநிதித்துவம் பறிபோனமைக்கான பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்கவேண்டும்!

## -அ. இ. தமிழர் மகாசபை பிரதிநிதி கோபாலகிருஸ்ணன்



(காரைதீவு )

நடந்துமுடிந்த தேர்தலில் அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் பறிபோனதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கவேண்டும்.

இவ்வாறு கருணா அம்மான் போட்டியிட்ட அகில இலங்கை தமிழர் மகாசபைக் கட்சியின் முன்னாள் செயலாளரும் கிழக்கு தமிழ்க் கூட்டமைப்பின் தலைவருமான செங்கதிரோன் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் காட்டமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது யாரால் என்பதை முதலில் முழுமையாக ஆராயவேண்டும். இம்முறை தேர்தல் பரப்புரையில் கருணா அம்மானுக்கு எதிராக பாரிய பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அதாவது, அவர் ஏன் மட்டக்களப்பிலிருந்து அம்பாறை வந்தார் என்றும் அவர் துரோகி என்றும் பிரசாரம் செய்யப்பட்டது.

இந்த இரு பிரசாரத்தின் மத்தியிலும் அம்பாறை தமிழ் மக்கள் கருணா அம்மானுக்கு அளித்த வாக்குகள் கூட்டமைப்பைவிட அதிகமானவை. அதாவது, கூட்டமைப்பின் அந்தப் பிரசாரத்தை மக்கள் நம்பவில்லை. அல்லது அதனை உதாசீனம் செய்துள்ளனர். அவர்களை மக்கள் நிராகரித்துள்ளனர். மாறாக இரண்டு மாதத்துள் பிரசாரத்தில் இறங்கிய கருணா அம்மானுக்கு மக்கள் சுமார் 30 ஆயிரம் வாக்குகளை அள்ளிவாரி வழங்கியுள்ளனர். இது ஒரு வரலாறு.

எனவே, கூட்டமைப்பால்தான் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டதே தவிர, எம்மாலோ, கருணா அம்மானாலோ அல்ல. எனவே, அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்களே ஏற்கவேண்டும்.

இம்முறை தமிழர் சார்பில் பிரதானமாகப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 25,255 வாக்குகளையும் அகில இலங்கை தமிழர் மகா சபை 29,379 வாக்குகளையும் பெற்றமை தெரிந்ததே.

இங்கு 4,124 வாக்குகள் வித்தியாசத்தால் த.தே.கூட்டமைப்பை அ.இ.த.மகாசபை சார்பிலான கருணா அம்மான் அணி தோற்கடித்திருக்கிறது. எனவே, வாக்குகளை குறைவாகப்பெற்ற கூட்டமைப்பினால்தான் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, த.தே.கூட்டமைப்பு தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் செல்வாக்கை அது இழந்துள்ளது. அதன் கடந்தகால போக்குகள், முன்னாள் எம்.பி.கோடீஸ்வரன் மக்களுக்கு சேவை செய்யாமல் தான்மட்டும் சம்பாதித்த சுயநல செயற்பாடுகள் ஆகியன மீது மக்கள் நிறைய வெறுப்படைந்துள்ளனர்.

அப்படியிருந்தும் அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் சிலர் வீட்டுக்கு வாக்களித்து தாமே தம் தலைமீது மண் அள்ளிப்போட்டுக்கொண்ட நிலையே ஏற்பட்டுள்ளது.

எனவே , இதனை ஒரு பாடமாக எடுத்து எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து த.தே.கூட்டமைப்பை முற்றாக நிராகரிக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்மக்கள் சமூக, பொருளாதார ரீதியில் முன்னேறமுடியும். அப்போதே விமோசனம் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல , கிழக்கு மாகாண சபையை தமிழர் வென்றெடுக்கவேண்டுமாக இருந்தால் கிழக்கு மாகாணத்திலிருந்து முற்றாக கூட்டமைப்பை விரட்டியடிக்க வேண்டும் - என்றார்.

# எனக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்

## – கருணா அம்மான்



( அம்பாறை )

கடந்த ஒரு மாத காலமாக என்னோடு இணைந்து பாடுபட்ட அனைத்து ஆதரவாளர்களுக்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் - என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணித் தலைவர் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

நடைபெற்றுமுடிந்த ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை தமிழர் மகாசபை சார்பில் பீரங்கி கப்பல் சின்னத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியில் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் விநாயகமூர்த்தி முரளிதரன் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

என்னை வெற்றிபெறச் செய்வதற்காக கடந்த ஒரு மாத காலமாக என்னோடு இணைந்து பாடுபட்ட அனைத்து ஆதரவாளர்களுக்கும் வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்மீதும் என் கட்சிமீதும் நம்பிக்கை வைத்து பல வழிகளிலும் உதவியாக நின்ற அனைத்து மக்களின் தேவைகளை இனங்கண்டிருக்கிறேன். அவற்றை நிறைவேற்றுவதற்கு என்னால் முடிந்தவரை முயற்சிகளை எடுப்பேன். இது ஒரு தோல்வி அல்ல எமது கட்சிக்கு கிடைத்த முதலாவது வெற்றியாகும். தொடர்ந்தும் மக்கள் என்னோடு இணைவதன் மூலம் இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அதிக வெற்றியை நிலைநாட்டுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

# உழவு இயந்திரம் தடம்புரண்டு ஒரு பிள்ளையின் தந்தை மரணம்!





( கல்குடா )

கரடியனாறு பொலிஸ் பிரிவில் வேப்பவெட்டுவான் பண்டாரக்கட்டு வயல் பகுதியில் உழவு இயந்திரம் தடம்புரண்டதில் ஒருவர் மரணமடைந்த சம்பவமொன்று நிகழ்ந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

வேப்பவெட்டுவானை சேர்ந்த உதயராசா மயூரன் (வயது 27) என்பவரே மரணமடைந்தவராவார். ஒரு பிள்ளையின் தந்தையான இவர் தனது தந்தையின் வயலை உழுவுவதற்காக நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) மாலைநேரம் வீட்டிலிருந்து உழவு இயந்திரத்தை இயக்கிக்கொண்டு சென்றவேளை வயல் வரம்பு பகுதியில் உழவு இயந்திரம் ஏறும்போதே தடம்புரண்டு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நான்கு டயர்களும் மேல்நோக்கியவாறு இருக்க சாரதியான இவர் இரு மட்காட் பகுதிக்குமிடையிலுள்ள இரும்பு சட்டத்திற்குள் அகப்பட்டதால் தலைப்பகுதி பாதிப்புற்று அதிக குருதி வெளியேறிய நிலையில், செங்கலடி வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நீதிபதியின் கட்டளைக்கமைய, மரண விசாரணைக்காக சம்பவ இடத்துக்கு கரடியனாறு பொலிஸாருடன் நேற்றுக்காலை சென்ற மரண விசாரனை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர், பிரேதத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொள்ள பணித்ததையடுத்து பிரேத பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று மரண விசாரனை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் தெரிவித்தார்.

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வெற்றிக்கொண்டாட்டம்



(வவுனியா)

வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் குலசிங்கம் திலீபன் நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சி 11,118 வாக்குகளைப் பெற்றுள்ளது. இதில் குலசிங்கம் திலீபன் 3,203 விருப்பு வாக்குகளைப் பெற்று ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் முதன்முறையாக புதிய உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதனை முன்னிட்டு அவரின் வீட்டின் முன்பகுதியில் கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# யாழ். மத்திய கல்லூரியில் கடும் மோதல்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வாக்கெண்ணும் நிலையத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றாகிய புளொட் கட்சியின் ஆதரவாளர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளமையால் பதற்றநிலை ஏற்பட்டது. முன்னதாக வெளியாகியிருந்த தகவல்களின் அடிப்படையில் சிவஞானம் சிறீதரன், சசிகலா ரவிராஜ் ஆகியோருடன் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவுசெய்யப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், சசிகலா ரவிராஜை தன்னுடைய உறுப்புரிமையை சுமந்திரனுக்கு விட்டுத்தருமாறு பல சுற்றுப்பேச்சுகள் நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இருந்தபோதிலும் சசிகலா அதற்கு உடன்பட மறுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், திடீரென சித்தார்த்தன் தெரிவில் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் அவருக்குப் பதிலாக சுமந்திரனின் பெயரே இடம்பெற்றதாகவும் அங்கிருந்தவர்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருந்ததாகவும் இதனையடுத்து மீள வாக்கை எண்ணுமாறு புளொட் ஆதரவாளர்கள் போர்க்கொடி தூக்கியிருந்ததாகவும் அதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியதாகவும் தெரியவருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வாக்குகள் எண்ணும் மத்திய நிலையத்துக்கு வருகை தந்த நிலையில், அங்கு கூடியிருந்தவர்களும் தமது எதிர்ப்பை வெளியிட்ட நிலையில் சிறப்பு அதிரப்படையினர் தடியடி நடத்தினர்.

அதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது. எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் சுமந்திரன் சுமார் 15 நிமிடங்களில் கடும் பாதுகாப்புடன் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வாக்குகள் எண்ணும் மத்திய நிலையத்துக்கு அதிகாலை 1.40 மணியளவில் கடும் பாதுகாப்புடன் வருகை தந்தார்.

இந்தச் சம்பவங்களின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் தவராசா துவாரகன் மீது பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் தாக்குதலை மேற்கொண்டனர். அதனால் அவர் படுகாயமடைந்தார். இதேவேளை, இறுதித் தகவலின்படி சசிகலா தோல்வியடைந்ததாகவும் சுமந்திரன் வெற்றிபெற்றதாகவும் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# 2020 நாடாளுமன்றத் தேர்தல் இறுதி முடிவுகள் மாவட்ட மட்டத்தில்



## இரத்தினபுரி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 4,46,668 | (8) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 1,55,759 | (3) |
| தேசிய மக்கள் சக்தி - | 17,611 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 12,349 | |



## கண்டி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 4,77,446 | (8) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 2,34,523 | (4) |
| சுயேட்சைக் குழு 1 - | 25,797 | |
| தேசிய மக்கள் சக்தி - | 22,997 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 19,012 | |



## கம்பஹா மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன - | 8,07,896 | (13) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 28,5,809 | (4) |
| தேசிய மக்கள் சக்தி - | 61,833 | (1) |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 28,282 | |



## களுத்துறை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 4,48,699 | (8) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 1,71,988 | (2) |
| தேசிய மக்கள் சக்தி – | 33,434 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 16,485 | |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – | 10,979 | |




## குருநாகல் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 6,49,965 | (11) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 2,44,860 | (4) |
| தேசிய மக்கள் சக்தி – | 36,290 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 26,770 | |



## புத்தளம் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 2,20,566 | (5) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 80,183 | (2) |
| முஸ்லிம் தேசிய முன்னணி- | 55,981 | (1) |
| தேசிய மக்கள் சக்தி – | 9,944 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 7,985 | |



## திகாமடுல்ல மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 1,26,012 | (3) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 1,02,274 | (2) |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - | 43,319 | (1) |
| தேசிய காங்கிரஸ் - | 38,911 | (1) |



## யாழ்ப்பாண மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி – | 1,12,967 | (3) |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - | 55,303 | (1) |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி – | 49,373 | (1) |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி – | 45,797 | (1) |
| தேசிய மக்கள் சக்தி – | 35,927 | (1) |



## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 2,80,881 | (6) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 51,758 | (1) |
| தேசிய மக்கள் சக்தி – | 31,362 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 5,017 | |



## மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 79,460 | (2) |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் - | 67,692 | (1) |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - | 34,428 | (1) |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 33,424 | (1) |




## கொழும்பு மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 6,74,603 | (12) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 3,87,145 | (6) |
| தேசிய மக்கள் சக்தி – | 67,600 | (1) |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 30,875 | |



## வன்னி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி - | 69,916 | (3) |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 42,524 | (1) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 37,883 | (1) |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி - | 11,310 | (1) |



## பதுளை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 3,09,538 | (6) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 1,44,290 | (3) |
| தேசிய மக்கள் சக்தி – | 19,308 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 9,163 | |



## கேகாலை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன – | 3,31,573 | (7) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 1,31,317 | (2) |
| தேசிய மக்கள் சக்தி – | 14,033 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 12,168 | |




## மாத்தளை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 1,88,779 | (4) |
| ஐக்கிய மக்கள் சக்தி – | 73,955 | (1) |
| தேசிய மக்கள் சக்தி – | 7,542 | |
| ஐக்கிய தேசியக் கட்சி – | 6,592 | |



## திருகோணமலை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி – | 86,394 | (2) |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – | 68,681 | (1) |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி- | 39,570 | (1) |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி - | 3,775 | |



## அநுராதபுரம் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 3,44,458 | (7) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 1,19,788 | (2) |
| தேசிய மக்கள் சக்தி- | 24,492 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 8,254 | |



## நுவரெலிய மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 2,30,389 | (5) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 13,2,008 | (3) |
| சுயேட்சைக்குழு 1 - | 17,107 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 12,974 | |



## மொனராகல மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 2,08,193 | (5) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 54,147 | (1) |
| தேசிய மக்கள் சக்தி – | 11,429 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 3,494 | |



## பொலநறுவை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 1,80,847 | (4) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 47,781 | (1) |
| தேசிய மக்கள் சக்தி - | 6,792 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 6,525 | |



## காலி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 4,30,334 | (7) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 1,15,456 | (2) |
| தேசிய மக்கள் சக்தி - | 29,963 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 18,963 | |



## மாத்தறை மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - | 3,52,217 | (6) |
| ஐக்கிய மக்கள் சக்தி - | 72,740 | (1) |
| தேசிய மக்கள் சக்தி - | 37,136 | |
| ஐக்கிய தேசியக் கட்சி - | 7,631 | |

நாடாளுமன்ற தேர்தலில்

## மரணதண்டனைக் கைதி பிரேமலால் ஜயசேகர வெற்றி



(இரத்தினபுரி)

கொலைக் குற்றச்சாட்டில் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

1,04,237 விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட பிரேமலால் ஜயசேகர இரத்தினபுரி மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சி சார்பில் அதிக விருப்பு வாக்குகள் பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு (2,00,977) அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது காவத்தையில் இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை, மட்டக்களப்பில் சிறையிலிருந்தவாறே பிள்ளையான் தேர்தலில் வெற்றிபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ரவூப் ஹக்கீம் நன்றி தெரிவிப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு 83,398 விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட ரவூப் ஹக்கீம், தமக்கு முதலிடத்தைப் பெறுவற்கு உதவிய வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரம் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், ஐக்கிய மக்கள் சக்தியில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும், புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் தராசு சின்னத்திலும் போட்டியிட்டவர்களுக்கு வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்த வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவித்த அவர், குருநாகல், வன்னி, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியினூடாக போட்டியிட்ட தமது கட்சி சார்பான வேட்பாளர்களை ஆதரித்தவர்களுக்கும் அவர் தமது நன்றிகள் உரித்தாகட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பலாங்கொடை தேர்தல் தொகுதியில்

## 26 வருடங்களுக்குப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தெரிவு

(இரத்தினபுரி)

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அபூசாலிக்குப் பின்னர் கடந்த 26 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படாத பலாங் கொடை தேர்தல் தொகுதியிலிருந்து போட்டியிட்ட இருவர் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

காமினி வலேபொட, அகில சாலிய எல்லாவல ஆகியோரே இம்முறை பலாங்கொடை தேர்தல் தொகுதியிலிருந்து புதிதாக தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். இவர்களில் காமினி வலேபொட 85,840 விருப்பு வாக்கு களையும் அகில சாலிய எல்லாவல 71,179 விருப்பு வாக்குகளையும் பெற்று நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர்.

இறுதியாக 1994ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பலாங்கொடை தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட மறைந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எல்.எம்.அபூசாலியின் பின் இத்தேர்தல் தொகுதியிலிருந்து உறுப்பினர்கள் எவரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவில்லை. இந்நிலையில், இத்தேர்தலில் இவ்விரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டமை இரத்தினபுரி மாவட்ட அரசியல் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக கருதப்படுகிறது.

# திகாமடுல்லயில் 4 முஸ்லிம் - 3 சிங்கள உறுப்பினர்கள் தெரிவு!

## தமிழ் வேட்பாளர்கள் எவரும் வெற்றிபெறவில்லை



(காரைதீவு)

திகாமடுல்ல மாவட்டத்தில் இம்முறை நான்கு முஸ்லிம் உறுப்பினர்களும் மூன்று சிங்கள உறுப்பினர்களும் மொத்தமாக எழுவர் நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளனர்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 1,26,012 வாக்குகளைப் பெற்று 03 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி 1,02,274 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43,319 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் தேசிய காங்கிரஸ் 38,911 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

அதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுரன சார்பில் விமலவீர திசாநாயக்க 63594 வாக்குகளையும் வீரசிங்க 56,006 வாக்குகளையும் திலக் ராஜபக்ஷ 54,203 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் எச்.எம்.எம்.ஹரிஸ் 36,850 வாக்குகளையும் பைசால் காசிம் 29,423 வாக்குகளையும் தேசிய காங்கிரஸ் சார்பில் ஏ.எல்.எம். அதாஉல்லா 35,697 வாக்குகளையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் முஷாரப் 18,389 வாக்குகளையும் பெற்று உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை.

அங்கு அகில இலங்கை தமிழர் மகாசபை சார்பில் போட்டியிட்ட கருணா அம்மான் தரப்பும் எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை. த.தே.கூட்டமைப்பு 25255 வாக்குகளையும் கருணா அம்மானின் தமிழர் மகாசபை கட்சி 29,379 வாக்குகளையும் பெற்று தோல்வியைத் தழுவியதனால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மீண்டும் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர் என அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கருணா அம்மானின் கட்சி 4124 வாக்குகளால் த.தே.கூட்டமைப்பை தோற்கடித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அம்பாறை, சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் 05 இலட்சத்தி 13 ஆயிரத்தி 979 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில், 4,02,344 பேர் வாக்களித்திருந்தனர்.

இதில் 38,5997 வாக்குகள் செல்லுபடியான வாக்குகளாக பதிவானதோடு 16,347 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் மூன்று மாவட்டங்களையும் மூன்று வெவ்வேறு கட்சிகள் கைப்பற்றின

(காரைதீவு)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பலரது கவனத்தையும் ஈர்த்த கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களையும் மூன்று வெவ்வேறு கட்சிகள் கைப்பற்றின.

இதன்படி அம்பாறை மாவட்டத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கைப்பற்றியுள்ளதோடு மட்டக்களப்பு மாவட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பும் திருமலை மாவட்ட த்தை ஐக்கிய மக்கள் சக்தி கட்சியும் கைப்பற்றியுள்ளன.

அதன்படி, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 1,26,012 வாக்குகளைப் பெற்று 03 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி 1,02,274 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43,319 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் தேசிய காங்கிரஸ் 38,911 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை. திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அம்பாறை, சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் 05 இலட்சத்து 13 ஆயிரத்து 979 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் 4,02,344 பேர் வாக்களித்திருந்தனர். இதில் 3,85,997 வாக்குகள் செல்லுபடியான வாக்குகளாக பதிவானதோடு 16,347 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 794,60 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி 67,692 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 34,428 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 33,424 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் பெற்றுக் கொண்டதோடு ஐக்கிய மக்கள் சக்தி 28362 வாக்குகளை பெற்றபோதிலும் எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி 86394 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 68,681 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 39,570 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

# அம்பாறை மாவட்டத்தில் வீணை சின்னத்திற்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு மனமார்ந்த நன்றி

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் துரையப்பா நவரெத்தினராஜா



(பாண்டிருப்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களித்த அனைத்து தமிழ் மக்களுக்கும் கட்சி சார்பில் மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். தோற்கடிக்க முடியாத தமிழ் மக்களின் தலைவராக தோழர் டக்ளஸ் தேவானந்தா திகழ்கின்றார், பெற்றிபெற்றுள்ள தோழருக்கு எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அம்பாறை மாவட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் துரையப்பா நவரெத்தினராஜா தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்த அம்பாறை மாவட்ட ஈ.பி.டி.பி. வேட்பாளர் து.நவரெத்தினராஜா மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல சவால்களை வென்று என்றும் தோற்கடிக்கமுடியாத தமிழ் மக்களின் தலைவராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தோழர் டக்ளஸ் தேவானந்தா திகழ்கின்றார்.

கடந்த 26 வருடங்களாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு வரும் ஒருவராக டக்ளஸ் இருப்பதுடன் இம்முறையும் வடமாகாண மக்களின் அமோக ஆதரவுடன் இரு ஆசனங்களை கைப்பற்றி வெற்றிவாகை சூடியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் கட்சியின் வெற்றிக்காகவும் பாடுபட்ட அனைத்து தோழர்களுக்கும் அம்பாறை மாவட்ட மக்கள் சார்பில் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியைப்பெற்று இங்குள்ள மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவுள்ளோம் என்றார்.

# சொறிக்கல்முனை கிராமத்தில் போதிய நூலக வசதியின்றி மாணவர்கள் அவதி

(பாண்டிருப்பு)

**நாவிதன்வெளி பிரதேச சபைக்குட்பட்ட சொறிக்கல்முனை கிராமத்தில் பொது நூலகம், இன்மையினால் மாணவர்களும் வாசகர்களும் பல்வேறு அசௌகரிய நிலைக்கு உள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.**

**இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நாவிதன்வெளி பிரதேச செயலக சபைக்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஓரிரு நூலகங்களே இயங்கும் நிலையில் சவளக்கடை, அன்னமலை, சாளம்பங்கேணி, வேம்படித்தோட்டம், 7ஆம் கிராமம், வேப்பையடி, 15ஆம் கிராமம், இலுப்பைக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் நூல் நிலையம் இன்மையினால் அதிதொலைவிலுள்ள கல்முனை பொது நூலகத்திற்கு நாளாந்தம் செல்ல வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். பிரதேச செயலக சபைக்கு அருகிலுள்ள குறித்த கிராமத்தில் மாணவர்களின் அத்தியாவசிய தேவை நலன் கருதி பொதுநூலகத்தினை அமைத்துத் தருமாறு அமைச்சு மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் பல தடவை கோரிக்கை விடுத்தும் பயனற்றதாகவே இருக்கின்றது என பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.**

**நாவிதன்வெளி கல்விக்கோட்டத்திற்குள் உயர்தர, இடைநிலை மற்றும் ஆரம்பப் பிரிவு என 21 பாடசாலைகள் இயங்கும் நிலையில் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கு தேவையான நூலகமின்மையினால் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதுடன் பரீட்சை பெறுபேறுகளிலும் மிகுந்த பின்னடைவுக்குள்ளாவதாக பாடசாலை சமூகத்தினால் கவலை தெரிவிக்கப்படுகிறது. கிராம மக்களினதும் மாணவர்களினதும் அத்தியாவசிய தேவை கருதி சகல வசதிகளுடனும் கூடிய பொது நூலகத்தை அமைத்துத் தருமாறு சமூகமட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

# தேர்தலை நடத்த ஒத்துழைத்தமைக்கு மாவட்டச் செயலாளர் நன்றி தெரிவிப்பு




கடந்த 05ஆம் திகதி நடைபெற்ற 2020 நாடா ளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பில் கலந்துகொண்ட வாக்காளர்கள் மற்றும் மாவட்டத்தில் சுமுகமான தேர்தலை நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துத் தரப்பினருக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான டி.எம்.எல். பண்டாரநாயக்க நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் 2019ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் படி திகாமடுல்ல மாவட்டத்தில் 5 இலட்சத்து 13 ஆயிரத்து 979 பேர் வாக்களிக்க தகுதிபெற்றிருந்தனர். தபால் வாக்காளர்களாக 28 ஆயிரத்து 668 பேர் தகுதி பெற்றிருந்தனர். இவர்கள் வாக்களிக்கவென 525 வாக்கெடுப்பு நிலையங்கள் மாவட்டத்தின் அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன.

இத்தேர்தல் கடமைகளில் 6000க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களும், 2000க்கும் மேற்பட்ட பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.எனவே, இம்முறை தேர்தல் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி சுமுகமாக முடிவடைந்தன, அதற்காக சகல பிரிவினருக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன் என்றார்.

# தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்க மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்

## சட்டத்தரணி முஷர்ரப் முதுநபீன்

(மருதமுனை)

ஊழலுக்கு கெதிரான தூய்மையான ஒரு அரசியல் கலாசாரத்தை உருவாக்க மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள், இந்த ஆணையின் மூலம் தூய்மையான ஒரு அரசியல் கலாசாரத்தையும், ஊழலுக்கு கெதிரானதும் நேர்மையீனத்திற்கு எதிரானதுமான ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் சட்டத்தரணி முஸர்ரப் முதுநபீன் தெரிவித்தார்.

தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நேற்று ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மக்களின் ஆதரவைகொண்டு தேர்தலை நடத்தலாம், அதில் வெற்றியும் பெறலாம் என்பதை நிரூபணம் செய்யும் வகையிலான ஒரு முறைமையை நாம் கடைப்பிடித்தோம். அது வெற்றியளித்திருக்கின்றது. மக்கள் மத்தியில் இதற்கு ஆதரவு இருந்ததன் அடிப்படையில் இந்தத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றிருக்கின்றோம். இத்தேர்தலில் நாம் வெற்றி பெறுவதற்காக எமக்காக உழைத்த - வாக்களித்த அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திகாமடுல்ல மாவட்டத்திற்கான ஒரு நாடாளுமன்ற பிரதிநிதியாகத்தான் நான் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றேன். இந்த மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ஊர்களிலும் சேவையாற்ற இருக்கின்றேன். குறிப்பாக இறக்காமம் பிரதேசத்தில் உள்ள மக்கள் எனது வெற்றியின் பங்காளிகளாக இருந்திருக்கின்றார்கள்.

இந்தப் பிரதேசம் வளர்ச்சி காண வேண்டிய பிரதேசமாகும் என்பதை நான் நன்கு அறிவேன். எமது அரசியல் செயற்றிட்டத்திலே இப்பிரதேசம் கவனத்தில் கொள்ளப்படும் என்ற உறுதி மொழியை வழங்குகின்றேன். அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஒரு ஆசனத்தைப் பெற்றிருக்கின்றது.

அந்த ஆசனம் எனக்குரியதானதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. என்மீது நம்பிக்கை வைத்து என்னை வேட்பாளராக நிறுத்திய எமது கட்சியின் தலைவர் றிஷாட் பதியுதீனுக்கும் வாக்களித்த மக்களுக்கும் எனக்காகப் பாடுபட்டவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் தலைவர் பிள்ளையான் பின்னால் அணிதிரண்டுள்ளனர்

## பிரதேசசபை உறுப்பினர் சுதாகரன்



(பாண்டிருப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பின்னால் அணிதிரண்டுள்ளனர் என்பதை நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

இங்கு 67 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை மக்கள் படகு சின்னத்திற்கு அளித்து மாவட்டத்தின் எதிர்காலத்தை தீர்மானித்துள்ளனர். எமது கட்சியின் வெற்றிக்காகவும், கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வெற்றிக்காகவும் பாடுபட்ட கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தேர்தல் வெற்றிக்காக உழைத்தவர்களுக்கு நன்றி கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை தேர்ந்தெடுத்துள்ளதுடன், கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையானை) வெற்றிபெற செய்துள்ளமைக்கு கட்சி சார்பாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மட்டக்களப்பில் வாழும் தமிழ் மக்கள் இம்முறை மாற்றமொன்றை வேண்டி நின்று இலங்கை தமிழரசுக் கட்சிக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்கள் எதிர்வரும் காலங்களிலும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியையே ஆதரிக்கவுள்ளனர். தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வெறுக்கத் தொடங்கியுள்ளனர் என்பதை இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் கட்டியம் கூறி நிற்கின்றது.




நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் தேர்தல் பெறுபேறுகளை அறிவதில் பொதுமக்கள் ஆர்வத்துடன் காணப்பட்டனர். இதற்கமைய கல்முனையிலுள்ள பிரபல பத்திரிகை விற்பனை நிலையமான ஹனீபா டீ ரூம் இல் ஆர்வத்துடன் பொதுமக்கள் 'தமிழன்' பத்திரிகை வாங்கி செல்வதை படங்களில் காணலாம். (கல்முனை)

# வேட்பாளர்களின் மாவட்ட ரீதியிலான விருப்புவாக்குகளின் விபரங்கள்

## நுவரெலியா மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| ஜீவன் தொண்டமான் | 0 ,044 |
| சீ.பி.ரத்நாயக்க | 70,871 |
| எஸ்.பி.திசாநாயாக்க | 66,045 |
| எம்.ரமேஷ் | 57,902 |
| நிமல் பியதிஸ்ஸ | 51,225 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| பழனி திகாம்பரம் | 83,392 |
| வீ. இராதாகிருஷ்ணன் | 72,167 |
| எம். உதயகுமார் | 68,119 |

## காலி மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| ரமேஷ் பத்திரண | 250,118 |
| சம்பத் அத்துகோரள | 128,332 |
| மொஹான் பீ டி சில்வா | 111,626 |
| சந்திம வீரக்கொடி | 84,984 |
| இசுரு தொடங்கொட | 71,266 |
| ஷான் விஜயலால் டி சில்வா | 67,793 |
| கீதா குமாரசிங்க | 63,358 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| கயந்த கருணாதிலக்க | 50,097 |
| மனுஷ நாணயக்கார | 47,399 |

## பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| நிமல் சிறிபால த சில்வா | 0,30, 0 |
| சுதர்ஷன தெனிபிட்டிய | 71,766 |
| தேனுக விதானகமகே | 68,338 |
| சாமர சம்பத் தஸநாயக்க | 66,393 |
| டிலான் பெரேரா | 53,081 |
| ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி | 50,151 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| வடிவேல் சுரேஸ் | 49,762 |
| அரவிந்தகுமார் | 45,491 |
| சமிந்த விஜேசிறி | 36,291 |

## மாத்தளை மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| ஜனக பண்டார தென்னகோன் | 73,296 |
| நாலக பண்டார கோட்டேகொட | 0,3 3 |
| பிரமித பண்டார தென்னகோன் | 67,776 |
| ரோஹண திஸாநாயக்க | 50,368 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| ரோஹினி குமாரி கவிரத்ன | 27,587 |

## இரத்தினபுரி மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| பவித்ரா வன்னியாராச்சி | 1 , |
| பிரேமலால் ஜயசேகர | 0 3,12 |
| ஜனக வக்கும்புர | 0 0,114 |
| காமினி வெலேபொட | 85,840 |
| அகில எல்லாவெல | 71,179 |
| வாசுதேவ நாணயக்கார | 66,991 |
| முதிதா பிரியாந்தி | 65,923 |
| டபிள்யூ.டி.செனவிரத்ன | 58,514 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| ஹேஷா விதானகே | 60,426 |
| வருண லியனகே | 47,494 |
| தலதா அத்துகோரல | 45,105 |

## திகாமடுல்ல மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| விமலவீர திஸாநாயக்க | 63,594 |
| டீ.சி.வீரசிங்க | 56,000 |
| திலக் ராஜபக்ஷ | 43,1 2 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| எம்.எச்.எம் ஹரீஸ் | 36,850 |
| பைஸல் காசிம் | 1 ,312 |
| **தேசிய காங்கிரஸ்** | |
| ஏ.எச்.எம் அதாவுல்லா | 35,697 |
| **அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்** | |
| மொஹமட் முஸரப் - | 18,389 |

## திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| எஸ்.எம் தௌபீக் | 43, 759 |
| இம்ரான் மஹ்ரூப் | 2 , 1 |
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| கபில நுவன் அத்துகோரல | 30, 056 |
| **இலங்கை தமிழரசு கட்சி** | |
| ஆர்.சம்பந்தன் | 21, 311 |

## மொனராகல மாவட்டம்

| | |
|---|---|
| **லங்கா பொதுஜன பெரமுன** | |
| சசீந்திர ராஜபக்ஷ | 0 3, 1 |
| குமாரசிறி ரத்னாயக்க | 0,42 |
| விஜித பெருகொட | 68,984 |
| ஜகத் புஷ்பகுமார | 66,176 |
| கயாஷான் விஜேசிங்க | 45,384 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| தர்மசேன விஜேசிங்க | 20,662 |

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| நாமல் ராஜக்பக்ஷ | 166,660 |
| டி.வி.ஷானக்க | 128,805 |
| மஹிந்த அமரவீர | 012, 2 |
| உபுல் கலப்பத்தி | 63,369 |
| அஜித் ராஜபக்ஷ | 47,375 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| திலும் வெதாரச்சி | 25,376 |

## குருநாகல் மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| மஹிந்த ராஜபக்ஷ | 527,364 |
| ஜோன்ஸ்டன் பெரேரா | 0 ,1 2 |
| குணபால ரத்னசேகர | 030, 0 |
| தயாசிறி ஜயசேகர | 001,341 |
| அசங்க நவரத்ன | 82,779 |
| சமன்பிரிய ஹேரத் | 66,814 |
| டீ.பி.ஹேரத் | 61,954 |
| அநுர பிரியதர்ஷன யாப்பா | 59,696 |
| பியரத்ன ஹேரத் | 54,351 |
| ஷாந்த பண்டார | 52,086 |
| சுமித் உடுகும்புர | 51,134 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| நளின் பண்டார | 75,631 |
| ஜே.சி.அலவதுவல | 65,956 |
| அசோக் அபேசிங்க | 54,512 |
| துஷார இந்துனில் | 49,364 |

## கம்பஹா மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| நாலக்க கொடஹேவா | 214,3 |
| பிரசன்ன ரணதுங்க | 316,544 |
| இந்திக்க அனுருத்த | 136,297 |
| சிசிர ஜயகொடி | 002,02 |
| நிமல் லன்சா | 108,945 |
| பிரதீப் வித்தான | ,3 3 |
| சுதர்ஷனி பெர்னாண்டோ | 89,329 |
| பிரசன்ன ரணவீர | 83,203 |
| ஹர்ஷனி குணவர்தன | , 11 |
| லசந்த அலகியவன்ன | 73,061 |
| நலின் பெர்னாண்டோ | 69,800 |
| மிலான் ஜயதிலக்க | 68,449 |
| உபுல் மஹேந்திரா | 67,756 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| சரத் பொன்சேகா | 00 ,444 |
| ரஞ்சன் ராமநாயக்க | 0 2, 1 |
| ஹர்ஷன ராஜகருணா | 73,612 |
| காவிந்த ஜயவர்தன | 52,026 |

## மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| நிபுன ரணவக்க | 020, 0 |
| கருணாதாஸ கொடிதுவக்கு | 003,20 |
| டலஸ் அழகப்பெரும | 0 2,423 |
| காஞ்சன விஜேசேகர | 96,033 |
| மகிந்த யாப்பா அபேவர்தன | 80,595 |
| வீரசுமன வீரசிங்க | 77,968 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| புத்திக பத்திரன | 44,839 |

## களுத்துறை மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| விதுர விக்ரமநாயக்க | 147,958 |
| ரோஹித அபேகுணவர்தன | 03 ,3 1 |
| சஞ்சீவ எதிரிமான்ன | 0 4, 2 |
| பியல் நிஷாந்த | 0 2, 3 |
| ஜயந்த சமரவீர | 100,386 |
| அனுப பஸ்குவல் | 97,777 |
| லலித் எல்லாவல | 76,705 |
| மஹிந்த சமரசிங்க | 58,514 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| ராஜித சேனாரத்ன | 77,476 |
| குமார வெல்கம | 77,083 |

## பொலன்னறுவ மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| மைத்திரிபால சிறிசேன | 000,02 |
| ரொஷான் ரணசிங்க | 90,615 |
| சிறிபால கம்லத் | 67,917 |
| அமரகீர்த்தி அதுகோரல | 45,939 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| கிங்ஸ் நெல்சன் | 22,392 |

## அநுராதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| எஸ்.எம்.சந்திரசேன | 139,368 |
| சன்ன ஜயசுமன | 133,980 |
| உத்திக பிரேமரத்ன | 022,44 |
| செஹான் சேமசிங்க | 119,878 |
| துமிந்த திஸாநாயக்க | 75,535 |
| எச்.நந்தசேன | 53,618 |
| எஸ்.குமாரசிறி | 49,030 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| இசாக் ரஹ்மான் | 49,290 |
| ரோஹண பண்டார | 39,520 |

## யாழ். மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி** | |
| அங்கஜன் ராமநாதன் | 36,365 |
| **இலங்கை தமிழரசு கட்சி** | |
| சிவஞானம் ஸ்ரீதரன் | 35,884 |
| எம்.ஏ.சுமந்திரன் | 27,834 |
| தர்மலிங்கம் சித்தார்த்தன் | 23,840 |
| **ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி** | |
| டக்ளஸ் தேவானந்தா | 32,146 |
| **அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்** | |
| கஜேந்திரகுமார் பொன்னம்பலம் | 31,658 |
| **தமிழ் மக்கள் தேசிய கூட்டணி** | |
| சி.வி.விக்னேஸ்வரன் | 10,443 |

## புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| சனத் நிஷாந்த | 80,082 |
| பிரியங்கர ஜயரத்ன | 3,314 |
| அருந்திக பெர்னாண்டோ | 70,892 |
| சிந்தக அமல் மாயாதுன்ன | 46,058 |
| அசோக பிரியந்த | 41,612 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| ஹெக்டர் அப்புஹாமி | 23,01 |
| நிரோஷன் பெரேரா | 31,636 |
| **முஸ்லிம் தேசிய கூட்டணி** | |
| அப்துல் அலி சப்ரி | 22,4 |

## கொழும்பு மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| சரத் வீரசேகர | 328,092 |
| விமல் வீரவங்ச | 267,084 |
| உதய பிரபாத் கம்மன்பில | 136,331 |
| விஜேதாஸ ராஜபக்ஷ | 120,626 |
| பந்துல குணவர்தன | 101,644 |
| பிரதீப் சமன்குமார | 91,958 |
| தினேஸ் சந்திர ரூபசிங்க | 85,287 |
| குணவர்தன மதுர விதானகே | 70,205 |
| பிரேமனாத் சீ தொலவத்த | 69,055 |
| காமினி குலவங்ச லொகுகே | 62,543 |
| சுசில் பிரேமஜயந்த | 50,321 |
| ஜகத் குமார | 47,693 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| சஜித் பிரேமதாஸ | 2 4, 33 |
| எஸ்.எம்.மரிக்கார் | 96,916 |
| முஜிபுர் ரஹ்மான் | 87,589 |
| ஹர்ஷ த சில்வா | 82,845 |
| பாட்டாலி சம்பிக்க ரணவக்க | 65,574 |
| மனோ கணேசன் | 62,091 |

## கேகாலை மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி** | |
| கனக ஹேரத் | 128,592 |
| ரஞ்சித் சியாம்பலாபிட்டிய | 0 2,2 |
| தாரக பாலசூரிய | 96,763 |
| ராஜிகா விக்ரமசிங்க | 68,802 |
| துஷ்மந்த மித்ரபால | 58,306 |
| சுதத் மஞ்சுல | 45,970 |
| உதயகாந்த குணதிலக்க | 46,628 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| கபீர் ஹாசீம் | 58,716 |
| சுஜித் சஞ்சய | 28,082 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| **தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்** | |
| சிவநேசதுரை சந்திரகாந்தன் | 54,198 |
| **இலங்கை தமிழரசு கட்சி** | |
| சாணக்யா ராஹுல் | 22,221 |
| கோவிந்தன் கருணாகரன் | 26,382 |
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| சதாசிவம் வியாழேந்திரன் | 22,218 |
| **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்** | |
| அஹமட் செய்னுலாப்தீன் நசீர் | 0 ,4 |

## வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| ரிஷாட் பதியுதீன் | 28,203 |
| **இலங்கை தமிழரசு கட்சி** | |
| சார்ள்ஸ் நிர்மலநாதன் | 25,668 |
| செல்வம் அடைக்கலநாதன் | 18,563 |
| வினோ நோக ராதலிங்கம் | 04,0 |
| **ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி** | |
| காதர் மஸ்தான் | 02,343 |
| **ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி** | |
| குலசிங்கம் திலீபன் | 3,203 |

## கண்டி மாவட்டம்

| | |
|---|---|
| **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன** | |
| திலும் அமுனுகம | 171,758 |
| மஹிந்தானந்த அளுத்கமகே | 161,471 |
| லொஹன் ரத்வத்த | 03 , 0 |
| அநுராத ஜயரத்ன | 140,798 |
| கெஹலிய ரம்புக்வெல்ல | 110,832 |
| வசந்த யாப்பா பண்டார | 108,940 |
| குணதிலக ராஜபக்ஷ | 49,317 |
| உதயன சாமிந்த கிரிந்திகொட | 39,904 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | |
| ரவூப் ஹக்கீம் | 83,398 |
| அப்துல் ஹலீம் | 71,063 |
| எம்.வேலுகுமார் | 57,445 |
| லக்ஷமன் கிரியெல்ல | 52,311 |

# நுவரெலியா மாவட்டத்தில் வெற்றிவாகை சூடியது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

(ஹட்டன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி 2 இலட்சத்து 30 ஆயிரத்து 339 வாக்குகளைப்பெற்று, ஐந்து ஆசனங்கள் சகிதம் நுவரெலியா மாவட்டத்தில் வெற்றிவாகை சுடியுள்ளது.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அணியின் ஆதிக்கமே கோலோச்சியிருந்த நிலையில், அந்நிலைமை மாறி இம்முறை மொட்டு மலர்ந்துள்ளது.

2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை, நுவரெலியா - மஸ்கெலியா ஆகிய தேர்தல் தொகுதிகளில் பொதுஜன பெரமுன தோல்வியை சந்தித்திருந்தது. ஹங்குராங்கெத்த தொகுதியில் மாத்திரமே கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலை வகித்தார். ஆனால், நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் மேற்படி நான்கு தொகுதிகளிலும் மொட்டுக் கட்சி வெற்றிநடை போட்டுள்ளது.

2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து ஐந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியிருந் தனர். இம்முறையும் ஐந்து தமிழ் நாடாளு மன்றப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத் தப்பட்டிருந்தாலும், மொட்டுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மூன்று சிங்கள வேட்பாளர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மூன்று வேட்பாளர்களை நிறுத்தியிருந்தால் மூவரும் வெற்றிபெற்று பிரதிநிதித்துவம் ஆறாக அதிகரித் திருக்கும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி நுவரெலி யாவில் படுதோல்வியடைந்துள்ளதுடன், சுயேச் சையாக போட்டியிட்ட அனுஷா சந்திர சேகரன் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்கு களைப்பெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

**விருப்பு வாக்கு**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் தலைமை வேட்பாளராக



களமிறங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண் டமான் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 155 வாக்கு களைப்பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

மொட்டு அணியின் சக வேட்பாளர்களான சி.பி.ரட்னாயக்க 70 ஆயிரத்து 871 வாக்கு களையும், எஸ்.பி.திஸாநாயக்க 66 ஆயிரத்து 45 வாக்குகளையும், மருதபாண்டி ராமேஷ்வரன் 57 ஆயிரத்து 902 வாக்குகளையும், நிமல் பியதிஸ்ஸ 51 ஆயிரத்து 225 வாக்குகளையும் பெற்று நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர். மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி சார்பில் நுவரெலி யாவில் போட்டியிட்ட கணபதி கனகராஜ் 46 ஆயிரத்து 268 வாக்குகளையும், பழனி சக்தி வேல் 36 ஆயிரத்து 944 வாக்குகளையும், ஏ.பிலிப்குமார் 36 ஆயிரத்து102 வாக்கு களையும், எம்.பிரபாகரன் 27 ஆயிரத்து 420 வாக்குகளையும், எஸ்.சதாசிவம் 4 ஆயி ரத்து 777 வாக்குகளையும், பெ.பிரதீபன் 2177 வாக்குகளையும் பெற்றுள்ளளனர்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்கள் மூவரும் வெற்றிபெற்றுள்ளனர். விருப்பு வாக்கு பட்டியலில் திகாம்பரம் 83 ஆயிரத்து 392 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். மேலும் வீ.இராதாகிருஷ்ணன் 72 ஆயிரத்து 167 வாக்குகளையும், எம்.உதயகுமார் 68 ஆயிரத்து 119 வாக்கு களையும் பெற்று நாடாளுமன்றம் செல்வதற்கு மக்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

கடந்தமுறை நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்த திலகராஜ் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. அவரின் பெயர் தேசிய பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டி யிட்ட முன்னாள் எம்.பி.க்களான நவீன் திஸா நாயக்க, கே.கே.பியதாச ஆகியோர் தோல்வி யடைந்துள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலை வராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் உயிரிழந்து விட்டார். அவரின் இடமே ஜீவனுக்கு வழங்கப் பட்டது. இ.தொ.காவின் சிரேஷ்ட உறுப்பின ரான முத்துசிவலிங்கம் தேர்தலில் போட்டி யிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்

# வெற்றியைக்கண்டு மகிழ்வதற்கு தந்தை அருகில் இல்லையென ஜீவன் தொண்டமான் கவலை

(தலவாக்கலை)

“புதிய மலையகத்தை உருவாக்குவேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் எனக்கு பேராதரவை வழங்கியுள்ளனர். எனவே, மக்களின் எதிர்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவேன். எனக்குக் கிடைத்த வெற்றியை மக்களுக்காக சமர்ப்பிக்கின்றேன்” - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர் கொட்டகலையில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது; “நுவரெலியா மாவட்டத்தையும் கைப்பற்றி வெற்றிபெறவேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாக இருந்தது. தந்தையும் இதனையே கூறியிருந்தார். அந்தவகையில் மாவட்டத்தை கைப்பற்றி விருப்பு வாக்குப் பட்டியலில் முதலிடம் பிடித்தது மகிழ்ச்சியளிக்கின்றது. இந்த பெரும் வெற்றியைக் கண்டு மகிழ்வதற்கு எனது தந்தை அருகில் இல்லாமை பெரும் கவலையளிக்கின்றது. ஆனால், எனது தந்தையை



நேசித்த மக்கள் என்னுடன் இருக்கின்றார்கள். அதுபோதும்.

தேர்தல் காலங்களில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சிறுபையன் என்றுகூட என்னை தாக்கிப் பேசியிருந்தார். ஆனால், என்மீது நம்பிக்கை வைத்து இளைஞர்களும், மக்களும் பேராதரவை வழங்கியுள்ளனர். புதியதொரு மலையகத்தை உருவாக்க முடியும் என மக்கள் நம்பியுள்ளனர். அந்த நம்பிக்கையை நிச்சயம் நிறைவேற்றுவேன். எனது வெற்றியை மக்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். சொல்லில் அல்லாமல் எனது சேவைகளை செயலில் காட்டுவதற்கே விரும்புகின்றேன்.

நான் முதன்முதலில் நாடாளுமன்றம் செல்கின்றேன். மக்களுக்கு சேவையாற்ற வேண்டும், மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அதனை முன்னிலைப்படுத்தியே பிரசாரமும் செய்தேன். நுவரெலியா மாவட்ட மக்கள் மட்டுமல்ல, வெளிமாவட்ட இளைஞர்களும் எமக்கு பேராதரவை வழங்கினர்.

இதனால்தான் கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் ஆசனங்களைப் பெறமுடியா விட்டாலும் எமக்கான வாக்கு வங்கி அதிகரித் துள்ளது. எனவே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு வாக்களித்த - அதேபோல் ஜனநாயக கடமையை நிறைவேற்றிய அனைத்து மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொள்கை அடிப்படையிலேயே எமது அரசியல் பயணம் தொடர்கின்றது. கட்சி, தொழிற்சங்கப் பேதங்களுக்கு இடமில்லை. வெற்றியின் பங்காளியாக எமது மக்களும் மாறியுள்ளனர். எனவே, மாற்றத்தை நோக்கி பயணிப்போம்” - என்றார்.

# சீத்துவக்கேடு 42



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

கஞ்சி எண்டால் என்னமோ ஏழை பாழையளின்ரை சாப்பாடு எண்டுதான் கனபேர் நினைக்கினம். அதிலும் குறிப்பா பிஸ்ஸா பேகர், வறுத்த கோழி பிரைட் ரைஸ், பிரியாணி எண்டு கடைவழிய பாஸ்ட் பூட் வாங்கித் தின்னிறவை அப்பிடித்தான் நினைக்கினம். ஆனால், கஞ்சி ஒரு பெரிய சத்துணவு எண்டது அவைக்கு விளங்கிறேல்லை.

வயசு போன காலத்துல ஒரு வாய் கஞ்சி ஊத்த வக்கில்லை, வயசு போன காலத்துல ஒரு வாய் கஞ்சி எண்டாலும் வேணும், பசித்த வயித்துக்கு கஞ்சி ஊத்த வக்கில்லை, அரை வயிறு கஞ்சி குடுக்க வக்கில்லை, ஒருவாய் கஞ்சிக்கு வழி இருக்கா எண்டு சொல்லு, கடவுள் ஒருவேளை கஞ்சிக்கெண்டாலும் வழி காட்டவேணும், அடுத்தவேளை கஞ்சிக்கு வக்கில்லை, கடன் இல்லா கஞ்சி கால் வயிறு, கஞ்சி கண்ட இடம் கைலாசம் சோறு கண்ட இடம் சொர்க்கம் எண்டு பாவனையில இருக்கிற வார்த்தைகள் கஞ்சியின்ரை முக்கியத்தை அதுவும் பின்னடி காலத்தில பஞ்ச காலத்தில, இடர் காலத்தில எவ்வளவு முக்கியம் எண்டதை சொல்லுது எண்டு ஆச்சி சொல்லுவா.

அதுமட்டுமில்லை, கஞ்சி எண்டது தமிழர்களின்ரை பாரம்பரியமான சாப்பாடு அதைப் பற்றி பட்டினப்பாலையிலை

**"அறம் நிலைஇய அகன் அட்டில்**
**சோறு வாக்கிய கொழுங் கஞ்சி**
**யாறு போலப் பரந்து ஒழுகி"**

எண்டு சொல்லப்பட்டிருக்கு எண்டு சொல்லுவா.

ஆச்சி இப்பிடி சொன்னதும், திருஞானசம்பந்தர் திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில

**"கருகு முடலார் கஞ்சி யுண்டு**
**கடுவேதின்**
**றுருகு சிந்தை**
**யில்லார்க்கயலா னுறைகோயில்**
**திருகல் வேய்கள் சிறிதே**
**வளையச் சிறுமந்தி**
**முருகின் பணைமே லிருந்து நடஞ்செய்**
**முதுகுன்றே"**

எண்டு கஞ்சியைப் பற்றிப் பாடுறார் எண்டு அப்பு சொல்லுவார்.

கத்திரிக்காய் கஞ்சி, தேங்காய்ப்பூக்கீரை கஞ்சி, சாத்தாவாரிக் கஞ்சி, நன்னாரிக் கஞ்சி, பொன்னாவரசுக் கஞ்சி, வல்லாரைக் கஞ்சி, உப்புக் கஞ்சி, பால் கஞ்சி, சக்கரைக் கஞ்சி எண்டு விதம் விதமான கஞ்சியளை அந்த நாளையிலை ஆக்கள் வைச்சுக் குடிச்சவை எண்டு ஆச்சி சொல்லுவா. நெருக்கடி காலங்களிலை, சண்டைக் காலங்களிலை, பஞ்சம் வந்த காலங்களிலை, நோய் நொடி வந்த காலங்களிலை எல்லாம் கஞ்சிதான் முக்கியமான சாப்பாடா இருந்திருக்கு எண்டுவா.

குறிப்பா பலநாள் பட்டினி கிடந்த ஆக்களுக்கு கஞ்சிதான் சரியான உணவா பழையகால டாக்குத்தர்மார் எல்லாம் குடுத்திருக்கினம் எண்டுவா . யாழ்ப்பணத்தில கடும் பஞ்சம் வந்த நேரம் நாவலர் கஞ்சித் தொட்டி ஊர்வழியை வைச்சுத்தான் கனபேருக்கு பசி தீர்த்தவர் எண்டும் அதேமாதிரி அப்பர் பெருமானும் சம்பந்தர் பெருமானும் சிவனிடம் படிக்காசு வேண்டி தமிழகத்தில அவர்களின்ரை காலத்தில பஞ்சம் வந்தபோது கஞ்சி காச்சி ஊத்தித்தான் பஞ்சம் தீர்த்தவை எண்டும் அப்பு சொல்லுவார்.

நாட்கணக்கில பட்டினி கிடந்த ஒருத்தனுக்கு வாயைத் திறந்து சாப்பிடவே ஏலாது அவ்வளவு பலகீனம் அவனுக்கு. அப்பிடியான நிலையில அவனுக்கு சோத்தை வடிச்ச கஞ்சியில கொஞ்சம் சோத்தைப் போட்டு, நெய் ஊத்தி அதை ஒரு துணியில முடிஞ்சு உடம்பு முழுக்க ஒத்தணம் குடுத்த கொஞ்ச நேரத்தில அவன் எழும்பி இருந்தவன் எண்ட செய்தியை தான் விக்கிரமாதித்தன் கதையில படிச்சனான் எண்டு ஆச்சி சொல்லுவா.

எங்கட சின்ன வயசிலயும் எங்கேயும் விளையாடேக்கை விழுந்தெழும்பி அடிபட்டு நோவோடை வீட்டை வந்தால் கஞ்சி வடிச்ச உடன வாற சுடுசோத்தை ஒரு பழந்துணியில போட்டு தேங்காய்ப் பூவையும் போட்டு ஆச்சி ஒரு மூண்டு தரம் சுடச் சுட ஒத்தணம் குடுத்தா எண்டால் நோ இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போடும். இப்ப என்னண்டால் இப்பிடியான நோவுக்கு கண்ட கண்ட கிரீம்களை வாங்கி பூசி காசைச் செலவழிக்கிறதை ஒரு பாசனா செய்யினம்.

சாமத்தியப் பட்ட பொம்பிளைப் பிள்ளையளுக்கு உளுந்தங்கஞ்சியைக் குடுத்தா மாதவிடாயைச் சீராக்கும், இடுப்பு எலும்புகளை நல்ல பலமாக்கும் எண்டு ஆச்சி சொல்லுவா. அதுமட்டுமே காய்ச்சல் வந்த ஆக்களுக்கு குத்தரிசிக்கு வெட்டின உள்ளி கொஞ்சம் வெந்தயம் உப்பு போட்டு காச்சுற உப்புக் கஞ்சி மட்டும் குடுங்கோ எண்டு இப்பவும் சில டாக்குத்தர்மார் சொல்லுறவை எல்லே எண்டு அப்பு சொல்லுவார். கொத்தமல்லியை வறுத்து தேங்காய்ச் சொட்டும் இஞ்சியும் அடுப்பில சுட்டு அம்மியில அரைக்கிற சம்பல்தான் உந்த உப்புக்கஞ்சிக்கு சரியான புரியன் எண்டுவா ஆச்சி. உந்தச் சம்பலை கஞ்சியில கலக்கிக் குடிக்க வேணும் எண்டுவா.

காச்சலாலை வாற நீரிழப்புக்கு கஞ்சி நல்லம். அதோட அரிசிக் கஞ்சியிலுள்ள கலோரிகள் உடலுக்கு வாற சக்தி இழப்புக்கு இன்னும் நல்லம் அதோட கிருமியளையும் அழிச்சுப் போடும் எண்டுவார். ***(தொடரும்)***



# தமிழ் அரசுக் கட்சி மறுசீரமைப்பு அவசியம்

## கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அதிரடி



"இலங்கை தமிழ் அரசுக் கட்சியை பொறுத்தவரை கட்சியின் தலைவர், செயலாளர் ஆகியோர் தோல்வியுற்றிருக்கிறார்கள். ஆகவே, தமிழத் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள பிரதான கட்சியான தமிழ் அரசுக் கட்சியின் தலைமை தோல்வியுற்றதாகக் கருதலாம். அவர்கள் ஒருசில வாக்குகளால் தோற்கவில்லை. அவர்கள் தீர்மானமாக தோல்வியுற்றுள்ளார்கள். ஆகவே, அது குறித்தும் கட்சி நடவடிக்கை எடுக்கும். கட்சித் தலைமையின் செயற்றிற னின்மையே கூட்டமைப்பின் வீழ்ச்சிக்குக் காரணம். உடனடியாக கட்சியை மறுசீரமைத்து மக்கள்மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம்" – என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அதிரடியாக அறிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னர் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. வடக்கு, கிழக்கில் 20 ஆசனங்களை வழங்கவேண்டுமென நாங்கள் மக்களிடம் கேட்டோம். இப்பொழுது அதில் அரைவாசி எண்ணிக்கைதான் எங்களுக்கு'க் கிடைத்துள்ளது. பத்து ஆசனங்கள். இது மிக சொற்பம்.

இது நாங்கள் எதிர்பாராத ஒரு பின்னடைவு. உள்ளூ ராட்சித் தேர்தல்களில் 2018 ஒக்டோபரில் எங்களுக்கு இப்படியான பின்னடைவு இருந்தபோதிலும், அந்தத் தேர்தல் முறை ரீதியாக / சூழல் வித்தியாசம் காரணமாக அந்தப் பின்னடைவிலிருந்து மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம்.

இத்தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்துள்ள முறை பல கரிசனைகளை எழுப்புகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே நம்பிக்கை குறைந்துள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அந்த மக்கள் தீர்ப்பை நாம் பொறுப்புணர்வுடன் ஏற்றுக்கொள்வதுடன், அந்த நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் உடனடியாக நாங்கள் இறங்குவோம்.

மக்களுடன், அடிமட்ட தொண்டர்களுடனான கலந்துரையாடல்கள், எங்களுக்குள் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் மூலம் பின்னடைவுக்கான காரணத்தைக் கண்டறிந்து, உடனடியாக கட்சியை மறுசீரமைத்து மக்கள்மயப்படுத்தி, திரும்பவும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறும் கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்போம்.

எங்களுக்கு வாக்களிக்காத மக்கள், வழக்கம்போல இரண்டு பக்கமும் போயிருக்கிறார்கள் என்றால் அது சரியாக அமையாது. கடும் தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் பக்கமாக சிலர் இருக்கிறார்கள். அவர்களை போலித் தமிழ்த் தேசியவாதிகள் என நாங்கள் வர்ணிப்பதுண்டு. ஆனால், அவர்களுக்கும் ஒவ்வொரு ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஆனால், வடக்கு, கிழக்கையும் ஒட்டுமொத்தமாக சேர்த்து பார்க்கின்றபோது, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் அணிகளின் திசையில் மக்கள் கூடியிருக்கிறார்கள். அதன் ஒரு பிரதிபலிப்பாக அம்பாறையில் இம்முறை ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவமும் கிடைக்காமல் போயுள்ளது.

மட்டக்களப்பில் நாம் 2 ஆசனங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளோம். வன்னியில் 3 ஆசனங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளோம். எல்லாவற்றையும் விட மோசமாக யாழ்ப்பாணத்தில் 3 ஆசனங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளோம். வெளியே எங்களை விட அதிகமாக 4 ஆசனங்கள் உள்ளன.

இந்தப் பின்னடைவு சம்பந்தமாக கட்சிக்குள் சில கலந்துரையாடல்களை நடத்துவோம். அதிலும் முக்கியமாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியை பொறுத்தவரை, கட்சியின் தலைவர், செயலாளர் ஆகியோர் தோல்வியுற்றிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள பிரதான கட்சியான தமிழ் அரசுக் கட்சியின் தலைமை தோல்வியுற்றதாகக் கருதலாம். அவர்கள் ஒருசில வாக்குகளால் தோற்கவில்லை. அவர்கள் தீர்மானமாக தோல்வியுற்றுள்ளார்கள். ஆகவே, அது குறித்தும் கட்சி நடவடிக்கை எடுக்கும்.

இந்தப் பின்னடைவுக்கு கட்சியின் செயற்பாடும் நிச்சயமாக ஒரு காரணமாக அமைந்தது. வெளி அழுத்தங்களுக்கு மேலதிகமாக கட்சிக்குள் ஒற்றுமையின்மையும், ஒருசிலரை தோற்கடிக்க வேண்டுமென பகிரங்கமாக கூறி செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

இது சம்பந்தமாக விமலேஸ்வரி என்ற பெண்ணுக்கு எதிராக மட்டுமே கட்சி நடவடிக்கை எடுத்தது. அதைத் தவிர, பதவியிலிருந்த கட்சி அங்கத்தவர்கள் பலர் கட்சி வேட்பாளர்கள் குறித்து தாக்கிப் பேசியும், எழுதியும் வரப்பட்டது. இது குறித்து நான் கட்சித் தலைமையிடம் பல தடவை கூறியிருக்கிறேன். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிறிதரன் பலமுறை கட்சித் தலைமையிடம் முறையிட்டார். எழுத்திலும் ஆதாரங்களுடன் கட்சித் தலைவரிடம் தெரிவித்தார். அவர்கள் எவருக்கு எதிராகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஒரு அரசியல் கட்சி தேர்தலை சந்தித்தபோது, அந்தக் கட்சிக்குள் இருந்தே, கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராக செயற்படுவது பாரதூரமான தவறு. அவர்கள் உடனடியாக கட்சியை விட்டு நீக்கவேண்டியது பாரதூரமான விடயம். அவர்களை கட்சியை விட்டு நீக்காதது கட்சியின் பாரதூரமான பின்னடைவுக்குக் காரணம்.

கட்சிக்குள் இருந்துகொண்டு, சொந்தக் கட்சிக்கு எதிராக செயற்படுவது பாரதூரமானது. இந்த விடயம் கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம்.

அவர்கள் யாரை தோற்கடிக்கவேண்டுமென குற்றஞ் சாட்டினார்களோ அவர்கள் வெற்றிபெற்றுள்ளனர். இறுதிநாட்களில் கூட, சிறிதரனையும், சுமந்திரனையும் தோற்கடிக்கவேண்டுமென துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. சமூக வலைத்தளங்களில் விமர்சிக்கப்பட்டோம். நாம் வெற்றிபெற்றோம்.

கட்சி பாரிய பின்னடைவை சந்தித்துள்ள நிலையில், இதை வெற்றியாக சொல்ல முடியாது. இனிவரும் நாட்க ளில் தமிழ் அரசுக் கட்சியின் எழுச்சி இளைஞர்களின் கையில் உள்ளது. ஒரு மாற்றம் வேண்டுமென்பதை மக்கள தெட்டத்தெளிவாக கட்சிக்கு அடித்துரைத்துள்ளனர். அதனால் அது நடைபெற வேண்டும். மக்களின் நம்பிக்கையை எங்கள் மீது சுமத்தியுள்ளதன் காரணமாக மக்களால் கொடுக்கப்பட்ட அந்த ஆணையை நாம் சிரம் மேல் கொண்டு, கட்சி மீளெழுச்சியையும் நாங்கள் பொறுப்பேற்று முன்கொண்டு செல்வோம – என்றார்.

### வன்முறையால் அதிரும் லெபனான்:

# பெய்ரூட் துறைமுக வெடிப்பு: விபத்தா? திட்டமிட்ட சதியா?

## ஊழல் - அலட்சிய போக்கே காரணம் என்கின்றனர் மக்கள்



பெய்ரூட் துறைமுகத்தில் நேரிட்ட பயங்கர வெடிவிபத்துக்கு அதிகாரிகளின் ஊழல் மற்றும் அலட்சியப் போக்கே காரணம் எனக் கூறி பொதுமக்கள் கற்களை வீசி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதி முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது.

லெபனான் தலைநகரம் பெய்ரூட்டில் துறைமுக களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் வெடித்து சிதறிய விபத்தில் துறைமுகம் உருக்குலைந்து சின்னாபின்னமானது.

வெடிவிபத்தால் சுமார் 145 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர். 3 இலட்சம் பேர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். இதற்கு அரசு அதிகாரிகளின் அலட்சியமே காரணம் எனக் கூறி ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள், அரசு அலுவலகங்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தொடர்ந்து, வெடிவிபத்தில் உயிரிழந்த பாதுகாப்பு அதிகாரி ஜர்ஜஸ் போட்ச்சின் இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். அவரது உடலை அடக்கம் செய்ய எடுத்துச்சென்றபோது உறவினர்கள், பெண்கள் உள்ளிட்டோர் கதறி அழுதமை அப்பகுதியை மேலும் சோகத்தில் ஆழச் செய்துள்ளது.

இதனிடையே வெடிவிபத்துக்கு காரணமாக கருதப்படும் துறைமுக அதிகாரிகளை அந்நாட்டு அரசு வீட்டுக்காவலில் வைத்துள்ளது.

**விபத்தா? திட்டமிட்ட சதியா?**

இந்நிலையில், இவ்வெடிச் சம்பவம் தற்செயலாக நடந்த விபத்தா அல்லது திட்டமிட்ட தாக்குதலா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார வீழ்ச்சி, ஊழல், திறமையற்ற நிர்வாகம், கொரோனா வைரஸ் தாக்குதல் என திணறிவரும் லெபனான், இந்த வெடிவிபத்து சேதத்திலிருந்து மீள்வதற்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்டு 7 ஆண்டுகளான நிலையிலும், இந்த அமோனியம் நைட்ரேட்டை கிடங்கில் வைத்திருந்தது ஏன் கேள்வி எழுந்துள்ளது. தீவிரவாதிகள் யாராவது இதை பயன்படுத்தி வெடிக்க வைத்தார்களா அல்லது தற்செயலாக நடந்த விபத்தா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்த இந்நாட்டு பிரதமர் ஹசன் தியாப் உத்தரவிட்டுள்ளார்.

**அரசின் அலட்சியமே காரணம்**

அமோனியம் நைட்ரேட்டை அப்புறப்படுத்துவதில் அலட்சியம் காட்டியதாக துறைமுக அதிகாரிகள் மீது லெபனான் அரசு நடவடிக்கை எடுத்திருப்பது, கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதை அப்புறப்படுத்தும்படி அரசுக்கு துறைமுக அதிகாரிகள் பலமுறை எழுதிய கடிதங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

லெபனானுக்கு பல நாடுகள் உதவிக்கரம் நீட்டியுள்ளன. பிரான்ஸிலிருந்து மருத்துவ சாதனங்கள், மருந்துகள் என 3 விமானங்களில் உதவிப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பணத்தாசை**

கடந்த 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் ரஷ்யாவின் ஜோர்ஜியாவிலிருந்து **Rustavi Azot LLC** என்ற நிறுவனத்திலிருந்து மொசாம்பிக்கைச் சேர்ந்த **Fabrica de Explosivos** என்ற நிறுவனத்துக்கு அமோனியம் நைட்ரேட்டை ஏற்றிச்சென்ற ரஷ்ய தொழிலதிபர் **Igor Grechushkin** என்பவர் நடத்திவந்த **Teto Shipping** நிறுவனத்துக்கு சொந்தமான **Rhosus** என்ற கப்பல் சென்றுகொண்டிருந்தது. கப்பலின் தளபதியாக போரீஸ் புரேகோஷேவ் என்பவர் இருந்துள்ளார். 4 வாரங்கள் கழித்து ஏதென்ஸ் நகருக்கு இந்த கப்பல் வந்துள்ளது. அங்கிருந்து மொசாம்பிக் நோக்கி பயணித்துக்கொண்டிருக்கையில், அதன் உரிமையாளர் கப்பல் தளபதியை அழைத்து பெய்ரூட் சென்று அங்கிருந்து கனரக சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஜோர்தானிலுள்ள ஆஹாபா துறைமுகத்தில் சேர்க்க உத்தரவிட்டுள்ளார்.

இதனால், மத்தியதரைக்கடல் வழியாக பயணித்த கப்பல் பெய்ரூட் சென்றுள்ளது. அப்போது, கூடுதல் சரக்குகளை ஏற்றுவதிலுள்ள தொழில்நுட்பப் பிரச்சினையால் பெய்ரூட் துறைமுக அதிகாரிகள் கப்பலை பறிமுதல் செய்துள்ளனர். கப்பல் உரிமையாளரும் துறைமுகக் கட்டணம் செலுத்த மறுத்துள்ளார்.

பிறகு கப்பல் உரிமையாளர் அந்தக் கப்பலை அப்படியே விட்டுவிட்டார். இதனால், கப்பலிலிருந்து 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் பாதுகாப்புக் காரணங்களுக்காக துறைமுகத்திலுள்ள 12ஆம் இலக்க களஞ்சியசாலையில் வைக்கப்பட்டது. கப்பல் தளபதி போரிஸ் உள்ளிட்ட ஊழியர்கள் 11 மாதங்கள் பெய்ரூட்டில் சட்டப் பேராட்டம் நடத்தி, பின்னர் விடுவிக்கப்பட்டனர். கப்பல் அப்படியே கைவிடப்பட்டது. இந்தக் கப்பல் மட்டும் பெய்ரூட் நகருக்கு செல்லாமலிருந்திருந்தால், இப்படி ஒரு விபத்தே நடந்திருக்காது. ஆனால், கப்பல் உரிமையாளரின் பண ஆசை காரணமாக பிரச்சினையில் சிக்கி 145 உயிர்கள் பலியெடுத்துவிட்டது.

**நிச்சயம் தண்டிக்கப்படவேண்டும்**

இதுகுறித்து ரஷ்யாவின் சோச்சி நகரில் தற்போது வசித்துவரும் ரோஸஸ் கப்பல் தளபதி போரீஸ் தெரிவிக்கையில்,

"விபத்தில் இறந்தவர்களுக்காக நான் வருத்தமும் வேதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெய்ரூட் துறைமுகத்தில் ரோட் ரோலர்கள் உள்ளிட்ட சில கனரக வாகனங்களில் ஏற்றிச்செல்ல எங்களுக்கு உத்தரவிடப்பட்டது. கப்பலும் பழையது. ஆனால், கப்பல் உரிமையாளர் எடுத்த முடிவால்தான் நாங்கள் பெய்ரூட் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. கப்பல் பிடிபட, பெய்ரூட்டில் எங்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு கடிதம் எழுதியும் எந்த பலனுமில்லை. சட்டப் போராட்டத்துக்குப் பிறகு எங்களை விடுவித்தனர். கையில் பணமும் இல்லை. சம்பளமும் கிடைக்கவில்லை.

அதையெல்லாம் விட இப்போது சேமித்து வைக்கப்பட்டிருந்த அமோனியம் நைட்ரேட் வெடித்து பெய்ரூட் நகரத்தில் ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளமை மிகுந்த வேதனை தருகிறது. இந்த விபத்துக்குக் காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படவேண்டும்" – என்று தெரிவித்துள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7